වාර්ෂික වාර්තාව

ANNUAL REPORT

ஆண்டு அறிக்கை

2019





තෘතීයික හා වෘත්තිය අධ්‍යාපන කොමිෂන් සභාව
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION

නිපුණතා සංවර්ධන, රැකීරක්ෂා හා කම්කරු සබඳතා අමාත්‍යාංශය
திறன்கள் அபிவிருத்தி, தொழில்வாய்ப்பு மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சு
Ministry of Skills Development, Employment & Labour Relations

உள்ளடக்கம் **பக்க இலக்கம்**

ஆணைக்குழுத் தகவல்கள்		II
தொலைநோக்கு மற்றும் செயற்பணி		III
தலைவர் அவர்களின் செய்தி		IV
பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி		VI
1.0	அறிமுகம்	1
2.0	மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அமைப்புக்கட்டமைப்பு	1
3.0	மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதவியணி	3
4.0	நிர்வாகம் மற்றும் நிதி பிரிவு	5
5.0	திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு	23
6.0	பாடநெறிகளின் பதிவு, தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு	33
7.0	தேசிய தேர்ச்சி நியமம், பாடத்திட்டம் மற்றும் தேசிய தொழிற்தகைமை பிரிவு	39
8.0.	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	45
9.0	கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவு	57
10.0	தகவல் முறைமைகள் பிரிவு	69
நிதி அறிக்கை		85 - 108
	தொகுக்கப்பட்ட வருமானக் கூற்று	85
	நிதிநிலைக் கூற்று	86
	தேறுமதியில் மாற்றங்கள்	87
	காசுப்பாய்ச்சல் கூற்று	88
	தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றிற்குரிய குறிப்புகள்	90
	தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றிற்குரிய உப குறிப்புகள்	99
	நிதி நிலைமைக் கூற்றிற்கான அட்டவணை - அட்டவணை 01 - பணிக்கொடை ஏற்பாடு	106
தணிக்கை அறிக்கை		109
அமைவான கணக்காய்வு அத்தியட்சகரின் அறிக்கை		118

ஆணைக்குழுத் தகவல்கள்

நிறுவகம்	:	மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு
அமைச்சு	:	திறன்கள் அபிவிருத்தி, தொழில்வாய்ப்பு மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சு
முகவரி	:	03 ஆம் மாடி, “நிபுணதா பியச”, 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 05
மின்னஞ்சல்	:	info@tvec.gov.lk
இணைய தளம்	:	www.tvec.gov.lk
தொலைபேசி	:	011 - 7608000
தொலைநகல்	:	011 - 2555007
கணக்காய்வாளர்கள்	:	கணக்காய்வு அத்தியட்சகர், கணக்காய்வு அத்தியட்சகர் திணைக்களம், சுதந்திர சதுக்கம், கொழும்பு - 07
வங்கி	:	மக்கள் வங்கி வை. எம். பி. ஏ கிளை பொறளை

தொலைநோக்கு

தொழிற் சந்தைக்கு பொருந்தும் வகையில் தரமான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வியை சகலருக்கும் வழங்குவதே எமது தொலைநோக்காகும்.

செயற்பணி

மாறுகின்ற உலக சந்தையின் தேவைப்பாடுகள் மற்றும் சமூக - பொருளாதார குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் பயனுறுதியும் வினைத்திறனும் மற்றும் தர உத்தரவாதமும் வாய்க்கப்பெற்ற தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி முறைமையை ஸ்தாபித்தலும் மற்றும் அதனைப் பேணுதலுமே எமது செயற்பணியாகும்.

தலைவர் அவர்களின் செய்தி

வித்தியாஜோதி பேராசிரியர் தயந்த விஜயசேகர

2019 ஆம் ஆண்டு ஆரம்பமாகிய போது நான் தலைவராகவும் மற்றும் திரு ஜானக ஜயலத் அவர்கள் பதில் பிரதி பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றினோம். அவர் வெளிநாடு சென்று தங்கியிருந்த போது திரு. எஸ். யூ. கே. ரூபசிங்க, பணிப்பாளர் (பதிவு மற்றும் தராதர அங்கீகாரம்) அவர்கள் பதில் பணிப்பாளர் நாயகம் பதவியினை தற்காலிக அடிப்படையில் வகித்திருந்தார்.

வருட ஆரம்பத்தில் பிரிவுகளின் தலைவர்களுடனான இணக்கப்பாட்டுடன் ஆணைக்குழுவின் நிர்வாக செயற்பாடுகள் மீள் ஒழுங்கமைக்கப்பட்டதுடன் அது அனைத்து பிரிவுகளினதும் மற்றும் அலுவலர்களினதும் வினைத்திறன் மற்றும் பொருத்தப்பாடு என்பவற்றினை மேம்படுத்துவதற்கு காரணமாகியது. பங்காளிகளிடையில் நிலவிய தவறான கருத்துகள் அகன்று மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் ஒழுங்குபடுத்தும் நிறுவகமாக மீளுருவாக்கம் பெற்றுள்ளது.

தேசிய தொழிற்தகைமை (NVQ) முறைமையினை மீளாய்வு செய்யும் பிரதான செயற்பாடானது செயலிழந்து காணப்பட்டதுடன் அதற்காக துறைசார் சர்வதேச நிபுணத்துவம் மிக்க ஆலோசகரான டேவிட் லைன் அவர்களின் அறிவினை உபயோகித்தல் மேற்கொள்ளப்பட்டது. இது உதித்த ஞாயிறு தினத்தின் பின்னர் நடைமுறைப்படுத்தப்படவிருந்த போதிலும் நாட்டின் நிலைமை காரணமாக அது தடைப்பட்டது. ஆனால், தேசிய தொழிற்தகைமை பிரிவின் செயற்பாட்டு உதவியுடன் அதனை மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு முடிந்துள்ளது. இங்கு துறைசார் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் செயலமர்வொன்று நடைபெற்றது.

எவ்வாறாயினும், பணிப்பாளர் நாயகத்தின் பதவியினை நிரப்புதல் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையினால் அதற்காக பத்திரிகை வாயிலான விளம்பரமொன்றின் மூலம் நியமனம் செய்யவேண்டியிருந்தது. அதற்காக இணையத்தள வரையறையினுள் பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமனம் செய்வதற்கு இரண்டு அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் முன்வைக்கப்பட்டு ஆர். ஈ. எஸ். குமாரரத்ன அவர்கள் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்கு பணிப்பாளர் நாயகமாக 3/ 2018 அரச நிர்வாக சுற்றறிக்கை நியமங்களிற்கு அமைவாக நியமிக்கப்பட்டார்.

எவ்வாறாயினும், அண்ணளவாக இரண்டு வருட காலப்பகுதிக்கு மூன்று பணிப்பாளர் பதவிகள் தொடர்பாக வெற்றிடங்கள் நிலவியதுடன் அப் பதவிகளிற்காக பதில் கடமை அடிப்படையில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு காரணங்களினால் பதில் கடமை காலமானது காலங்கடந்து சென்றிருந்ததுடன் ஏனைய பதவிகளிற்கான வெற்றிடங்களுடன் கூடிய விளம்பரமானது பிரசுரிக்கப்பட்டது. ஆனால், ஜனாதிபதி தேர்தல் போன்ற பல்வேறு காரணங்களினால் மேலும் பதவிகளிற்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன.

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் ஒன்றாக காணப்படுகின்ற தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பான தேசிய கொள்கை வெளியீட்டினை தயாரிப்பதற்கு இவ் வருடத்தில் தேசிய கல்வி ஆணைக்குழு உடன் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பான தேசிய கொள்கை வெளியீட்டினை வெளியிடுவதற்கு உயர்ந்த பட்ச பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் இவ் வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு செயலமர்வொன்று நடாத்தப்பட்டது. இதனை நடைமுறைப்படுத்துதல் மிகவும் விரைவாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.

வருடத்தின் இறுதி அரையாண்டினை கருத்திற்கொள்ளும் போது வருடத்தின் ஆரம்ப அரையாண்டில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செயற்றிறன் பங்காளிகள் எதிர்பார்த்த மட்டத்தில் காணப்படவில்லை.

திறன்கள் துறைசார் சபைகளின் செயற்றிறன் இதைவிடவும் கூடுதலாக காணப்படவேண்டியுள்ளதுடன் இதனூடாக தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்களின் முகாமைத்துவத்தினை முறைப்படுத்த வேண்டியுமுள்ளது.

தொழில்சார் வழிகாட்டலினை வழங்கும் தேவைப்பாட்டிற்காக TVET Guide 2019 தகவல் முறைமை பிரிவின் மூலம் மாவட்ட அடிப்படையில் பிரதிகளை தயாரிக்கப்பட்டு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையத்தளத்தின் ஊடாக மிகவும் பரந்தளவில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் தொழில் வழிகாட்டல் தேவைப்பாட்டினை ஈடுசெய்தல் போதியளவாக காணப்படவில்லை. தேசிய தொழிற்தகைமை பிரிவானது மிகக் குறைந்த அலுவலர்களுடன் அவசிய ஆவணங்களை தயாரித்து பங்காளிகளிற்கு முடிந்தளவில் வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. அலுவலர்களின் பொருட்டு நிலவும் பற்றாக்குறையினை பொருட்படுத்தாமல் பதிவு செய்தல் மற்றும் தராதர அங்கீகாரமளித்தல் பிரிவானது மீண்டும் ஒருமுறை நாடு பூராவும் தனது செயற்பாட்டினை மிகவும் உன்னதமான நிலையில் மேற்கொண்டது. அவ்வாறே, ஒழுங்கீனங்கள் உட்பட பல குறைபாடுகளை தவிர்த்துக்கொள்வதற்கு தர உத்தரவாதம் மற்றும் ஒழுங்குபடுத்தல் பிரிவின் செயற்பாடுகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவினால் வுஏநுவு ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதற்காக பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு சட்டமூலத்தின் திருத்த முன்மொழிவுகள் தொடர்பாக மேலதிக நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு இயலாமல் போனது தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையுடன் (NAITA) இணைந்து பங்கேற்கமுடியாமையினாலும் மற்றும் இணைந்த குழு தொடர்பாக பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் முழுமையாக நியமிக்கப்படாமையினாலுமாகும்.

ஜனாதிபதியின் செயலாளர் மூலம் விநியோகிக்கப்பட்ட சுற்றுநிருபத்தின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத ஆரம்பத்தில் அவசியமாயின் தலைவர் பதவியிலிருந்து பதவி விலகுவதற்கு நான் கோரிக்கை விடுத்த போதிலும் 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (திருத்தப்பட்ட) சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அடுத்த வருடம் 02 ஆம் திகதியிலிருந்து பதவியில் மீண்டும் ஒருமுறை நீடிக்குமாறு நியமனக்கடிதமொன்று வழங்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிடம் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை எட்டுதல் மற்றும் சேவைகளை வழங்குதல் என்பவற்றிற்கு முடியும் என நான் எதிர்பார்க்கின்றேன்.



வித்தியாஜோதி பேராசிரியர் தயந்த விஜயசேகர

தலைவர்

பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) 1992 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் ஒழுங்கமைக்கும் நிறுவகமாக ஆரம்பிக்கப்பட்டதுடன் அது 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டமூலத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் முக்கிய பொறுப்புக்களாவன கொள்கை வகுத்தல், தரவு பாதுகாப்பு மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியினை நாட்டினுள் ஒருங்கிணைத்தல் மற்றும் மேம்படுத்தல் என்பனவாகும். 1999 ஆம் ஆண்டின் சட்டமூலத்திற்கு சேர்க்கப்பட்ட திருத்தத்தின் மூலம் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் 17 பேர் இடையில் தலைவர் உட்பட உறுப்பினர்கள் 10 பேரும் தொழில்வழங்குநர் சங்கம் வியாபார மற்றும் தொழில்நுட்ப சங்கம், வணிக விஞ்ஞான சபை சங்கம் என்பவற்றின் பிரதிநிதிகளாக தனியார் துறையின் பங்களிப்பானது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத் திருத்தத்தின் நோக்கமாக காணப்படுவது ஆணைக்குழு தனியார் துறையின் பங்களிப்புடன் தொழிலாளர் சந்தை தேவைப்பாடுகளை அடிப்படையாக கொண்ட இலங்கை தொழிற்பயிற்சி கொள்கை வகுப்பு மற்றும் கொள்கையினை நடைமுறைப்படுத்தும் போது மேற்கொள்ள வேண்டிய செயன்முறைகளை அறிமுகம் செய்தல் என்பனவாகும்.

2019 ஆம் ஆண்டில் விசேடமாக நிறைவேற்றப்பட்டவை இடையில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி கொள்கையினை முன்வைத்தல் மற்றும் அதற்கு அமைச்சரவை மற்றும் பாரளுமனற அனுமதிகள் கிடைக்கப்பெறல் முக்கிய விடயங்களாக கொள்ளலாம். இத் திட்டத்தினை அடிப்படையாக கொண்ட அபிவிருத்தி திட்டத்தினை 2020 ஆம் ஆண்டில் முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியினை நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு நேரடியாக பங்களிப்பு செய்யக்கூடிய காரணியாக வெகுவாக கருத்திற்கொள்ளப்பட்டு அந் நோக்கத்தினை எட்டும் பரந்தளவிலான விசேட செயற்பாடு ஒன்றினை மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

2019 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவானது ரூபா 130 மில்லியன்கள் மீண்டுவரும் செலவினத்தினையும் மற்றும் ரூபா 10 மில்லியன்கள் மூலதன செலவினத்தினையும் பேணியுள்ளது. இங்கு காணப்படும் விசேடத்துவம் யாதெனில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவானது தனது சேவைகளை வழங்குவதன் மூலம் மதிப்பிடப்பட்ட தொகையான ரூபா 36 மில்லியன்களையும் தாண்டி ரூபா 48.7 மில்லியன்கள் வருமானத்தினை இவ் வருடத்தில் ஈட்டியுள்ளது.

2019 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவானது தேசிய தொழிற்தகைமையாளர்களின் பொருட்டு 78,007 சான்றிதழ்களை விநியோகித்துள்ளது. இது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 26மூ அதிகரிப்பாகும் (2018 ஆம் ஆண்டில் 61,150 சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன). அதற்கும் மேலதிகமாக 2019 ஆம் ஆண்டின் வருடாந்த செயற்பாட்டு திட்டத்திற்கு இணங்க ஆணைக்குழு 700 நிறுவகங்களை பதிவு செய்வதற்கான கணிப்பீடுகளிற்கு உட்படுத்த இலக்கிடப்பட்டிருந்த போதிலும் அதில் 697 எண்ணிக்கையான நிறுவகங்களை கணிப்பீட்டிற்கு உட்படுத்தியுள்ளது.

மேற்கூறப்பட்ட பயிற்சி நிறுவகங்களிற்குரியதும் மற்றும் புதிய தொழிற்பயிற்சி பாடநெறிகளை அடிப்படையாக கொண்டதுமான 22 தேசிய தேர்ச்சி நியமங்களை பல்வேறான பாடத்திட்டங்களின் கீழ் பயிற்சிகளை ஆரம்பிப்பதற்கு முன்வைக்கப்பட்டதுடன் 25 தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் நாளாதுவரையாக்கம் செய்யப்பட்டுள்ளன.

தொழிற்பயிற்சி பாடநெறிகள் மற்றும் நியமங்களை மேம்படுத்துவதற்கு பங்களிப்பினை வழங்கக்கூடியதான புதிய ஆய்வுகளை ஊக்குவித்தலினை மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவானது மேலும் மேற்கொள்கின்றது. அதற்கிணங்க 2019 ஆம் ஆண்டில் புதிய ஆய்வுகள் 06 மற்றும் குறுகியகால திட்டங்கள் 02 ஆகியவற்றினை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மிகவும் பரந்தளவிலான தற்கால தொழிலாளர் சந்தைக்குரிய தகவல்களை வழங்குவதற்கு தற்போது மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்படும் தொழிலாளர் சந்தை வெளியீட்டில் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பயிற்சி பாடநெறிகள் மற்றும் நியமங்களை மேலும் சந்தை தேவைப்பாட்டினை இலக்காக கொண்டு வியாபார துறைசார் கேள்விகளை ஈடுசெய்யக்கூடிய தொழிலாளர் படை ஒன்றினை உருவாக்குவதற்கு நெருங்கிய தொடர்பினை வியாபார துறையுடன் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் இந் நோக்கத்தின் பொருட்டு உருவாக்கப்பட்ட துறைசார் திறன்கள் சபைகளின் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு பங்களிப்பு செய்கின்றது.

கொள்கைகளை வகுப்பதில் இருந்து அதனை நடைமுறைப்படுத்துதல் மற்றும் கணிப்பீடு செய்தல் என்பவை தொடர்பாக வியாபார துறையானது பெறுமதியான பங்களிப்பு செயற்பாட்டினை மேற்கொள்ளமுடியும். இதற்காக வியாபாரிகளின் நேரடி பங்களிப்பானது அவசியமாகும். வியாபார துறைசார் பயிற்சிபெற்ற தொழிலாளர்களின் தேவைப்பாட்டினை முறைப்படியான செயன்முறைகளிற்கு இணங்க வழங்குவதன் மூலம் அவர்களிற்கு பங்களிப்பு செய்து பரஸ்பர வெற்றியினை (win – win Situation) ஏற்படுத்துவதற்கு அவர்களின் நேரடி பங்களிப்பினை நாம் மேலும் எதிர்பார்க்கின்றோம்.



ஆர். டீ. எஸ். குமாரரத்ன
பணிப்பாளர் நாயகம்

1.0 அறிமுகம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்விச் (திருத்தம்) சட்டத்தின் கீழ் ஓர் நியதிச்சட்ட அமைப்பாக 1999 ஆம் ஆண்டு திசெம்பர் 16 ஆம் திகதி தொடக்கம் தொழிற்படுகின்றது.

எமது ஆணைக்குழுவின் பொது குறிக்கோள்கள் பின்வருமாறு

(அ) பொருளாதாரத்தின் மனிதவளத் தேவைகளுக்கு இசைவாக சகல மட்டங்களிலும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியை முறைமையை திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்

(ஆ) சான்றிதழ் அடங்கலாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி விருதுகளை வழங்குவதற்காவும் மற்றும் ஏனைய கல்விசார் தகைமைகளை அளிப்பதற்காவும் தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும்

(இ) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியை வழங்கும் நிறுவகங்கள், முகவர் நிறுவகங்கள் மற்றும் ஏனைய சகல ஸ்தாபனங்களினதும் கல்வி மற்றும் பயிற்சி நியமங்களைப் பேணல்.

2.0 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அமைப்புக்கட்டமைப்பு

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் இயங்கும் இவ்வாணைக்குழு 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்விச் (திருத்தம்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக நியமிக்கப்பட்ட தலைவர் ஒருவர் அடங்கலாக உறுப்பினர்கள் 12 பேரை கொண்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் இருந்த உறுப்பினர்களின் விபரம் பின்வருமாறு

சட்டமூலத்தின் சரத்து 6 (1) (ஊ) இற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள்

1. பேராசிரியர் தயந்த எஸ் விஜேசேகர அவர்கள் - தலைவர்
   மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

2. கலாநிதி ராணி ஜயமஹ அவர்கள் - உறுப்பினர்
   மதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி

3. கலாநிதி சங்கைக்குரிய கிரிந்தே அஷ்ஷஜி அவர்கள் - உறுப்பினர்
மதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி

4. வணக்கத்திற்குரிய என். ஏ. எச் அந்தோனி ஹியூமர் பின்ரோ அவர்கள் - உறுப்பினர்
மதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி

5. திரு. புத்திக ரூவன் மடிஹஹே வா அவர்கள் - உறுப்பினர்
மதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி

6. திரு. வடிவேல் புத்திகசிகாமணி அவர்கள் - உறுப்பினர்
மதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி

சட்டமூலத்தின் 6 (1) (அ) தொடக்கம் (உ) வரையான சரத்துகளிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள

அ) திரு ஆர்.டீ.எஸ். குமாரரத்ன அவர்கள் - உறுப்பினர்
பணிப்பாளர் நாயகம்
மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு

ஆ) திரு நசீர் அஹமட் அவர்கள் - உறுப்பினர்
தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை

இ) திரு ரவி ஜயவர்தன அவர்கள் - உறுப்பினர்
தலைவர்
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

ஈ) திருமதி.ஜி.என்.கே. மலலசேகர அவர்கள் - உறுப்பினர்
பணிப்பாளர் நாயகம்
தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்

உ) பேராசிரியர் கே.டீ.எம்.யூ. ஹேமபால அவர்கள் - உறுப்பினர்
பணிப்பாளர் நாயகம்
இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம்

ஊ) திரு.ஹேமால் கஸ்தூரியாராட்சி அவர்கள் - உறுப்பினர்
நிதி அமைச்சு
திறைசேரியின் பிரதிநிதி

3.0 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதவியணி

இவ்வாணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணிப்பாளர் நாயகம் கடமையாற்றுகிறார். அவரது உதவிக்காக பிரதி பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள் நால்வர் (04) மற்றும் பிரதி பணிப்பாளர்கள்/ உதவி பணிப்பாளர்கள் இருபத்தைந்து பேர் (25) அடங்கலாக 91 பேர்களைக் கொண்ட பதவியணியொன்றினூடாக ஆணைக்குழுவின் பணிகள் 2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டன. அதற்கமைய, இவ்வாணைக்குழுவின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை எய்தும் நோக்கில் பின்வரும் பிரிவுகளின் கீழ் அதன் செயற்பாடுகள், இலக்குகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

- நிர்வாகம், நிதிப் பரிவு
- திட்டமிடல், ஆராய்ச்சிப் பிரிவு
- நிறுவக பதிவு, பாடநெறி தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ பிரிவு
- தர நிர்ணயம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு
- மக்கள் தொடர்பு (நிபுணர் மற்றும் தொழிற்துறை) பிரிவு
- தேசிய தொழிற்தகைமை பிரிவு
- தகவல் முறைமைகள் பிரிவு
- சட்ட பிரிவு

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒதுக்கங்களுக்கமைய இவ்வாணைக்குழுவிற்காக 116 பேர் கொண்ட பதவியணி அனுமதிக்கப்பட்டிருப்பினும் 2019.12.31 அன்று இவ்வாணைக்குழுவில் 91 பேர் கொண்ட பதவியணியொனறு இருந்தது. பதவியணியினரின் விபரங்கள் வருமாறு:

அட்டவணை 3.1 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதவியணி விபரம் - 2019

	பதவியின் பெயர்	அங்கீகரிக்கப்பட்ட தொகை	2019.12.31 ஆம் திகதியன்று பணியிலிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை
1	பணிப்பாளர் நாயகம்	01	01
2	பிரதி பணிப்பாளர் நாயகம்	01	01
3	பணிப்பாளர்	07	04
4	தொழிலாளர் சந்தை பகுப்பாய்வாளர்	01	01
5	பிரதி/ உதவி பணிப்பாளர்	29	25

	பதவியின் பெயர்	அங்கீகரிக்கப்பட்ட தொகை	2019.12.31 ஆம் திகதியன்று பணியிலிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை
6	பிரதி பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணை)	01	01
7	உதவி பணிப்பாளர் (சட்டம்/பணிப்பாளர் சபை செயலாளர்)	01	01
8	பிரதி பணிப்பாளர் (நிதி)	01	01
9	புள்ளிவிபரவியலாளர்	01	01
10	பிரதி பணிப்பாளர் (தகவல் சேவை)	01	01
11	நிர்வாக உத்தியோகத்தர்	01	01
12	மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்)	01	01
13	நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்	06	05
14	அபிவிருத்தி உத்தியோகத்தர்	17	11
15	தகவல் தொழில்நுட்ப அலுவலர்	01	00
16	தகவல் தொழில்நுட்ப உதவியாளர்	02	01
17	கணனி பிரயோக உதவியாளர்	06	04
18	முகாமைத்துவ உதவியாளர் (வகுப்பு I/ வகுப்பு II/ வகுப்பு III)	16	12
19	தகவல் உதவியாளர்	01	00
20	சாரதி (வகுப்பு I/ வகுப்பு II/ வகுப்பு III)	14	12
21	அலுவலக செயற்பாட்டு உதவியாளர்	07	07
	மொத்தம்	**116**	**91**

2019.05.30 ஆம் திகதியன்று மொழிபெயர்ப்பாளர், சாரதி, முகாமைத்துவ உதவியாளர், கணனி பிரயோக உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், தகவல் தொழில்நுட்ப உதவியாளர் போன்ற பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்வதற்கு பத்திரிகை வாயிலாக விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டன. அதற்கிணங்க, 2019.08.30 ஆம் திகதி மொழிபெயர்ப்பாளர் மற்றும் சாரதி ஆகிய இரண்டு பதவிகளின் நிமித்தம் மாத்திரம் நேர்முகத்தேர்வுகள் இடம்பெற்றன.

சாரதி பதவியின் பொருட்டு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் 24 பேரிற்கு நேர்முகத்தேர்வுகள் நடாத்தப்பட்டதுடன் அதில் தகைமைகளை பெற்றிருந்த விண்ணப்பதாரிகளின் பொருட்டு செய்முறை பரீட்சை ஒன்றினை நடாத்துவதற்கு சிபார்சு செய்யப்பட்டது. ஆனால் ஜனாதிபதி தேர்தலின் காரணமாக அனைத்து ஆட்சேர்ப்புகளும் தற்காலிகமாக கைவிடப்பட்டன.

அபிவிருத்தி உத்தியோகத்தர், கணனி பிரயோக உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர், தகவல் தொழில்நுட்ப உதவியாளர் ஆகிய பதவிகளின் பொருட்டு தகைமைகளை பெற்றிருந்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை 2110 ஆகும். ஆனால் ஜனாதிபதி தேர்தலின் காரணமாக அனைத்து ஆட்சேர்ப்புகளும் தற்காலிகமாக கைவிடப்பட்டன.

மொழிபெயர்ப்பாளர் பதவிக்காக தகைமைகளை பெற்றிருந்த இரண்டு விண்ணப்பதாரிகளிற்கும் நேர்முகத்தேர்வுகள் நடாத்தப்பட்டன. அந் நேர்முகத்தேர்விற்கு வருகைதந்திருந்த திருமதி ஐ.டபில்யூ.எஸ்.ஏ. திசாநாயக்க அவர்கள் நேர்முகத்தேர்வு சபையின் மூலம் 2019.08.30 ஆம் திகதி தேர்வு செய்யப்பட்டு 2019.11.14 ஆம் திகதியன்று நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

4.0 நிர்வாகம் மற்றும் நிதி பிரிவு

இப்பிரிவு ஆணைக்குழுவின் செயற்பாடுகளை வினைத்திறனாகவும் மற்றும் செயற்திறன் மிக்கதாகவும் மேற்கொள்வதற்கு அவசியமான மனிதவளங்கள் மற்றும் நிதிவளங்கள் ஆகியவற்றை முகாமை செய்தல் உள்ளடங்கலாக உள்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் செயற்பாடுகள் போன்றவற்றை நிறைவேற்றிவருகின்றது.

மனிதவள முகாமைத்துவத்திற்கமைவாக பதவி வெற்றிடங்களை நிரப்பும் முகமாக 2019 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் இவ்வாணைக்குழுவில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

4.1 2019 ஆம் ஆண்டின் புதிய நியமனங்கள்

	பெயர்	பதவி	நியமன திகதி
1	திரு ஆர்.டீ.எஸ். குமாரரத்ன அவர்கள்	பணிப்பாளர் நாயம்	2019.06.06
2	திருமதி ஐ.டபில்யூ.எஸ்.ஏ.திசாநாயக்க அவர்கள்	மொழிபெயர்ப்பாளர்	2019.11.19

4.2 2019 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் பதவிகளிலிருந்து விலகியவர்கள்

	பெயர்	பதவி	சேவையிலி-ருந்து விலகிய திகதி
1	செல்வி. எவ்.டபில்யூ.இரேஷா குமுதுனி அவர்கள்	அபிவிருத்தி உத்தியோகத்தர்	2019.04.10
2	திரு.எச்.ஜீ.கே.என்.பண்டார அவர்கள்	உதவி பணிப்பாளர்	2019.06.16
3	திரு.எச்.பீ. நிபுண ஹசங்க	முகாமைத்துவ உதவியாளர்	2019,06,10
4	திருமதி சீ.எச்.விமுக்தி தர்ஷனிகா	முகாமைத்துவ உதவியாளர்	2019,07,01
5	திருமதி. எவ்.பீ.சீ.ஷானிக்கா அவர்கள்	அபிவிருத்தி உத்தியோகத்தர்	2019.07.30
6	திருமதி. கே.டபில்யூ.பியூமி அப்சரா அவர்கள்	அபிவிருத்தி உத்தியோகத்தர்	2019.08.01
7	திரு சமீர அத்தப்பத்து	தகவல் தொழில்நுட்ப அலுவலர்	2019.09.19
8	திரு. ஜீ.ஜீ.துசார சம்பத் அவர்கள்	சாரதி	2019.09.02
9	திரு. டீ.கே.ஜெயக்கொடி	சாரதி	2019.12.31

4.3 2019 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட தற்காலிக/ பதில் கடமை புரிதல் தொடர்பான பதவிகளுக்காக ஆணைக்குழு அலுவலகத்தில் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பற்றிய விபரம்

பெயர்		புதில் கடமை/ தற்காலிக கடமை பதவி	திகதி
1	ஜே.ஏ.டீ.ஜே.ஜெயலத் அவர்கள்	பணிப்பாளர் நாயகம்	2018.11.21
2	கலாநிதி அஜித் பொல்வத்த அவர்கள்	பணிப்பாளர் (தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு)	2018.10.02
3	திரு. ஆர்.ஜே. சமரவீர அவர்கள்	பணிப்பாளர் (நிர்வாகம்)	2018.06.25
4	திருமதி ஏ.எஸ்.கல்பகே அவர்கள்	பிரதி பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணை)	2018.06.25
5	திரு.எஸ்.யூ.கே. ரூபசிங்க அவர்கள்	பணிப்பாளர் நாயகம்	2019.03.16 - 2019.04.26

4.4 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி

ஆணைக்குழுவில் கடமையாற்றும் அலுவலர்களின் விடயம் தொடர்பான அறிவினை அதிகரிக்கும் நோக்கில் அலுவலர்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் / மாநாடுகள் என்பவற்றுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. அதற்கிணங்க 2019 ஆம் ஆணடு ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு பயிற்சிகள் / மாநாடுகளில் பங்குபற்றிய அலுவலர்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

பெயர்		பிரிவு	பதவி	பாடநெறியின் பெயர்	நிறுவகம்	கால அளவு
1	திருமதி தில்ருக்ஷி ஹேரத் அவர்கள்	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு	உதவி பணிப்பாளர்	Innovative Grant Proposals for Successful Funding	University of Colombo	1 நாள்
2	செல்வி குசலா பனங்கல அவர்கள்	நிர்வாக பிரிவு	நிர்வாக அலு-வலர்	விடுமுறைக்கு பொறுப்பான அலுவலரின் செயற்பாடு மற்றும் பொறுப்புகள்	NILS	2 நாட்கள் 2019.02.25
3	செல்வி கே.டபில்யூ.சுஜானி தில்கார அவர்கள்	நிர்வாக பிரிவு	கணனி பிரயோக உதவியாளர்	விடுமுறைக்கு பொறுப்பான அலுவலரின் செயற்பாடு மற்றும் பொறுப்புகள்	NILS	2 நாட்கள் 2019.02.25

பெயர்		பிரிவு	பதவி	பாடநெறியின் பெயர்	நிறுவகம்	கால அளவு
4	திரு. பிரசங்க முத்துக்குமாரண அவர்கள்	பாடநெறி பதிவு, தாரதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமை பிரிவு	நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர	Certificate in English For Office Management	NILS	7 நாட்கள்
5	திருமதி விமர்ஷி ரம்மாவடு அவர்கள்	தகவல் முறைமைகள் பிரிவு	தகவல் தொழில்நுட்ப உதவியாளர்	Certificate in English For Office Management	NILS	8 நாட்கள்
6	திருமதி ஜி.எல்.ஐ.ஏ.எஸ். த சொய்சா அவர்கள்	உள்ளக கணக்காய்வு மற்றும் விசார-ணை பிரிவு	அபிவிருத்தி உத்தியோக-த்தர்	முறைசார் ஒழுக்காற்று விசாரணை	NILS	2 நாட்கள்
7	செல்வி கசுனி பமுணுசிங்க அவர்கள்	சட்ட பிரிவு	முகாமைத்துவ உதவியாளர்	முறைசார் ஒழுக்காற்று விசாரணை	NILS	2 நாட்கள்
8	செல்வி கே.டபில்யூ.சுஜானி தில்கார	நிர்வாக பிரிவு	கணனி பிரயோக உதவியாளர்	தொழிலாளர் கல்விமானி பட்டம்	University of Colombo	3 ஆண்டுகள்
9	திரு ரீ.ஜீ.ரவிந்து ரன்திக அவர்கள்	தலைவர் பிரிவு	அலுவலக உதவியாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
10	திருமதி எச்.ஜீ.சீ. ஷானிகா அவர்கள்	தொழிற்துறை உறவுகள் பிரிவு	அபிவிருத்தி உத்தியே - ாகத்தர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
11	திருமதி எச்.ஏ.தேவிந்தி தர்ஷனிகா அவர்கள்	உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணை பிரிவு	அபிவிருத்தி உத்தியோக - த்தர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
12	திருமதி ஜீ.எல்.ஐ.ஏ.எஸ். த சொய்சா அவர்கள்	உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணை பிரிவு	அபிவிருத்தி உத்தியோக - த்தர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
13	திரு. ஏ.எம். சமீர மதுஷான் அவர்கள்	தகவல் முறைமைகள் பிரிவு	தகவல் தொழில்நுட்ப அலுவலர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள

பெயர்		பிரிவு	பதவி	பாடநெறியின் பெயர்	நிறுவகம்	கால அளவு
14	செல்வி ஜயமினி மது'ா அவர்கள்	தகவல் முறைமைகள் பிரிவு	அலுவலக உதவியாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
15	செல்வி கசுனி பமுணசிங்க	சட்ட பிரிவு	முகாமைத்துவ உதவியாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
16	திருமதி. பீ.எஸ்.ஜே. விபுல்ஷி அவர்கள்	பயிற்சி நிய-மம் பாடத்திட்டம் மற்றும் தேசிய தொழிற்தகைமை பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
17	செல்வி எல்.என். கங்கானமே	பயிற்சி நிய-மம் பாடத்திட்டம் மற்றும் தேசிய தொழிற்தகைமை பிரிவு	அபிவிருத்தி உத்தியோக -த்தர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
18	செல்வி ஜீ.டபில்யூ.எஸ். பாஷினி அவர்கள்	திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
19	எம். டபில்யூ.ஏ.அசங்க ரங்கன அவர்கள்	திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு	அலுவலக உதவியாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
20	ஐவ.பீ.எஸ். உதயகாந்தி	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	கடமை அபிவிருத்தி வேலை த்திட்டம்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
21	செல்வி.கே.கே. கோ,ம்பன் அவர்கள்	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	அபிவிருத்தி உத்தியோக -த்தர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
22	செல்வி கே.டபில்யூ.பியூமி அப்சரா அவர்கள்	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	அபிவிருத்தி உத்தியோக -த்தர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள

பெயர்		பிரிவு	பதவி	பாடநெறியின் பெயர்	நிறுவகம்	கால அளவு
23	டபில்யூ.வஜிர பண்டார அவர்கள்	பாடநெறி பதிவு, தார-தர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமை பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
24	திரு. நதீக ஜீவந்த அவர்கள்	பாடநெறி பதிவு, தாரதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமை பிரிவு	நிகழ்ச்சித்-திட்ட ஒருங்கி - ணைப்பு அலுவலர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
25	திருமதி ஏ.எச்.என். சந்தமாலி அவர்கள்	பாடநெறி பதிவு, தார-தர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமை பிரிவு	அபிவிருத்தி உத்தியோக - த்தர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
26	திருமதி விமுக்தி தர்ஷனிகா அவர்கள்	நிர்வாக பிரிவு	முகாமைத்துவ உதவியாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
27	திருமதி யூ.ஜீ.சந்தி மேனகா அவர்கள்	பணிப்பாளர் நாயகம் பிரிவு	முகாமைத்துவ உதவியாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
28	திருமதி ஆர்.எஸ். பரனாந்து அவர்கள்	கணக்கு பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
29	திருமதி தனுஸ்கா சாமலி த சில்வா அவர்கள்	கணக்கு பிரிவு	முகாமைத்துவ உதவியாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
30	திருமதி கே.ஏ.டீ.ஹசந்தி லக்மினி அவர்கள்	தொழிற்துறை உறவுகள் பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
31	திருமதி ஏ.எஸ். கல்பகே அவர்கள்	உள்ளக கணக்காய்வு மற்றும் விசார-ணை பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள

பெயர்		பிரிவு	பதவி	பாடநெறியின் பெயர்	நிறுவகம்	கால அளவு
32	திரு ஜீ.சீ. ஜனக் த சில்வா அவர்கள்	உள்ளக கணக்காய்வு மற்றும் விசார-ணை பிரிவு	அபிவிருத்தி உத்தியோக - த்தர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
33	திரு டபில்யூ. ஜீ.சமன் குமார அவர்கள்	தகவல் முற-றமைகள் பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
34	திருமதி வீ.என். ரம்மாவடு அவர்கள்	தகவல் முறைமைகள் பிரிவு	தகவல் தொழில்நுட்ப உதவியாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
35	திருமதி பி.டீ.எஸ். காரியவசம் அவர்கள்	சட்ட பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
36	திருமதி எச். எம்.ஏ.கே.டீ.ஹேரத் அவர்கள்	பயிற்சி நிய-மம் பாடத்திட்டம் மற்றும் தேசிய தொழிற்தகைமை பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
37	திருமதி எச்.ஆர்.எம். யூ.யூ.விஜே பண்டார	பயிற்சி நிய-மம் பாடத்திட்டம் மற்றும் தேசிய தொழிற்தகைமை பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
38	யூ.ஏ.பிரியந்த தர்மசேன அவர்கள்	திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
39	செல்வி ஜீ.வீ.எல். பியூமாலி அவர்கள்	திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு	அபிவிருத்தி உத்தியோக - த்தர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
40	திருமதி அனுஷா குமாரி த சில்வா	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
41	ஜீ.சத்துரி உபேகஷா அவர்கள்	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள

பெயர்		பிரிவு	பதவி	பாடநெறியின் பெயர்	நிறுவகம்	கால அளவு
42	செல்வி ரீ.ஏ.டபில்யூ. மதுஷானி அவர்கள்	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	அபிவிருத்தி உத்தியோக - த்தர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
43	திருமதி.எச்.டபில்யூ. இரேஷா குமுதுனி அவர்கள்	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	அபிவிருத்தி உத்தியோக - த்தர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
44	திரு சஜித் கருணாநாயக்க அவர்கள்	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	அபிவிருத்தி உத்தியோக - த்தர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
45	திருமதி விபுலி நதீஷா அவர்கள்	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	கணனி பிரயோக உதவியாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
46	திருமதி டீ.டபில்யூ.இஷானி அவர்கள்	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	முகாமைத்துவ உதவியாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
47	செல்வி ஏ.ஜீ. இந்திராணி அவர்கள்	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	அலுவலக உதவியாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
48	திருமதி நிலுக்கா ராஜபக்ஸ அவர்கள்	நிர்வாக பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
49	திரு எச்.ஜீ.கே.என். பண்டார அவர்கள்	பாடநெறி பதிவு, தாரதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமை பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள

பெயர்		பிரிவு	பதவி	பாடநெறியின் பெயர்	நிறுவகம்	கால அளவு
50	திரு பிரசங்க முத்துக்குமாரண அவர்கள்	பாடநெறி பதிவு, தாரதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமை பிரிவு	நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
51	திரு என்.எச்.எஸ். தர்ஷன அவர்கள்	பாடநெறி பதிவு, தாரதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமை பிரிவு	நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
52	திருமதி பீ.ஜீ.ஏ. ஷானிக்கா சதுரங்கனி அவர்கள்	பாடநெறி பதிவு, தாரதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமை பிரிவு	முகாமைத்துவ உதவியாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
53	திரு ஜீ.ஜீ.சமன் குமார அவர்கள்	பாடநெறி பதிவு, தாரதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமை பிரிவு	அலுவலக உதவியாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
54	திருமதி ஜீ.எல். மாஸகோரால அவர்கள்	பாடநெறி பதிவு, தாரதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமை பிரிவு	உதவி பணிப்பாளர்	கடமை அபிவிருத்தி வேலைத்திட்டம்	SDFL	3 நாட்கள
55	திரு.என். எல். சந்தருவன் அவர்கள்	நிர்வாக பிரிவு	அலுவலக உதவியாளர்	ICT Level 4	VTA	720 மணி நேரம்
56	திருமதி.ஹசந்தி லக்மினி அவர்கள்	தொழிற்துறை உறவுகள் பிரிவு	உதவி பணிப்பாளர்	Masters of Social Sciences Degree Programmes in Sociology	University of Kelaniya	2 ஆண்டுகள்

பெயர்		பிரிவு	பதவி	பாடநெறியின் பெயர்	நிறுவகம்	கால அளவு
57	பீ.எம்.சீ.பீ. குணத்திலக்க அவர்கள்	தகவல் முறைமைகள் பிரிவு	பிரதி பணிப்பாளர் (பதில்)	Mater of Information Technology Degree Programme	University of Colombo	2 ஆண்டுகள்
58	திருமதி நிசன்சலா தில்ருக்ஷி	கணக்கு பிரிவு	முகாமைத்துவ உதவியாளர்	Staff of the Finance Division of the Institutions	SIDA	12 நாட்கள
59	திரு. நளின் த சில்வா அவர்கள்	கணக்கு பிரிவு	முகாமைத்துவ உதவியாளர்	Staff of the Finance Division of the Institutions	SIDA	12 நாட்கள
60	திருமதி யூ.ஜீ.சந்தி மேனகா அவர்கள்	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	முகாமைத்துவ உதவியாளர்	கலை வெளிவாரி சாதாரண பட்டப்படிப்பு	University of Kelaniya	3 ஆண்டுகள்
61	திரு ஆர்.ஜே.சமரவீர அவர்கள்	நிர்வாக பிரிவு	பணிப்பாளர் (நிர்வாகம்) பதில்	Masters of regional Development and Planning	University of Colombo	2 ஆண்டுகள்
62	செல்வி கசுனி பமுணுசிங்க அவர்கள்	சட்ட பிரிவு	முகாமைத்துவ உதவியாளர்	தொழிலாளர் நிறுவகத்தில் பட்டப்படிப்பு	University of Colombo	3 ஆண்டுகள்
63	திருமதி ஜீ.எல். மாசகோரால	பாடநெறி பதிவு, தாரதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமை பிரிவு	உதவி பணிப்பாளர்	Lead Auditor ISO 9001 - 2015 Training Programme	SLSI	5 நாட்கள
64	செல்வி குசலா பனங்கல அவர்கள்	நிர்வாக பிரிவு	நிர்வாக அலுவலர்	Lead Auditor ISO 9001 - 2015 Training Programme	SLSI	5 நாட்கள
65	திருமதி ஈ.சீ. யூ. குணதுங்க அவர்கள்	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	உதவி பணிப்பாளர்	Master In Labour Relatiun and Human Resource Management	University of Colombo	2 ஆண்டுகள்

பெயர்		பிரிவு	பதவி	பாடநெறியின் பெயர்	நிறுவகம்	கால அளவு
66	திரு.எச்.பீ.ஐ.சம்பத் அவர்கள்	நிர்வாக பிரிவு	நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்	Workshop on Training Need Assessment for Year 2020	SSDP	1 நாள்
67	திரு விஜிர விஜேசிங்க அவர்கள்	தொழிற்துறை உறவுகள் பிரிவு	உதவி பணிப்பாளர்	Workshop on Training Need Assessment for Year 2020	SSDP	1 நாள்

4.5 வெளிநாட்டு மாநாடுகளில் பங்குபற்றல்

2019 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற அழைப்பிதழ்களின் அடிப்படையில் ஆணைக்குழுவின் அலுவலர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாநாடுகளில் பங்குபற்றியிருந்தனர்.

பெயர்		பிரிவு	பதவி	பயிற்சி பாடநெறி	நாடு	கால எல்லை
1	திரு. ஆர். டீ. எஸ். குமாரரத்ன அவர்கள்	பணிப்பாளர் நாயகம் பிரிவு	பணிப்பாளர் நாயகம்	Conferance	Korea	21.10.2019 - 26.10.2019
2	திரு. ஜே. ஏ. டீ. ஜே. ஜெயலத் அவர்கள்	பிரதி பணிப்பாளர் நாயகம் பிரிவு	பிரதி பணிப்பாளர் நாயகம்	PHD Study Leaves	Thailand	15.11.2019 - 01.12.2019
						31.03.2019 - 01.05.2019
				Conferance	German	08.09.2019 - 13.09.2019
				Workshop		22.06.2019 - 06.07.2019
3	ஜீ.ஏ.எம். யூ.கனேபொல அவர்கள்	தகவல் முறைமைகள் பிரிவு	பணிப்பாளர்	Conferance	Germany	08.09.2019 - 13.09.2019
				Workshop		27.03.2019 - 30.03.2019

பெயர்		பிரிவு	பதவி	பயிற்சி பாடநெறி	நாடு	கால எல்லை
4	திருமதி டபில்யூ. ஏ. டபில்யூ. சீ. பிரேமரத்ன அவர்கள்	பயிற்சி நிய-மம் பாடத்திட்டம் மற்றும் தேசிய தொழிற்தகைமை பிரிவு	பணிப்பாளர்	Workshop	Thailand	09.06.2019 - 11.06.2019
5	திரு.மஞ்சுல விதானபத்திரண அவர்கள்	Industry Liaison Division	பணிப்பாளர் ூபதில்ரூ	Workshop	United kingdom	03.03.2019 - 09.03.2019
6	திருமதி.பீ.பீ. பீ.நாணயக்கார அவர்கள்	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	பிரதி பணிப்பாளர்	Youth Skills Forum	India	28.10.2019 - 01.11.2019
7	திருமதி ஏ.எஸ். அமரசிங்க அவர்கள்	கணக்கு பிரிவு	பிரதி பணிப்பாளர்	Seminar	China	09.12.2019 - 12.12.2019
8	திரு. டபில்யூ. கே.டீ.ஹரிச்சந்திர அவர்கள்	பாடநெறி பதிவு, தாரதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமை பிரிவு	பிரதி பணிப்பாளர்	Seminar	China	09.12.2019 - 12.12.2019
9	திருமதி ஈ.ஏ.கே. த சில்வா அவர்கள்	தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு	உதவி பணிப்பாளர்	Seminar	China	09.12.2019 - 12.12.2019
10	திருமதி.எச். எம்.ஏ.டீ.கே.ஹேரத் அவர்கள்	பயிற்சி நிய-மம் பாடத்திட்டம் மற்றும் தேசிய தொழிற்தகைமை பிரிவு	உதவி பணிப்பாளர்	Seminar	China	09.12.2019 - 12.12.2019
11	திரு பிரியந்த தர்மசேன அவர்கள்	திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு	உதவி பணிப்பாளர்	Seminar	China	09.12.2019 - 12.12.2019
12	திரு.எச்.ஜீ.கே.என். பண்டார அவர்கள்	பாடநெறி பதிவு, தார-தர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமை பிரிவு	உதவி பணிப்பாளர்	Workshop	India	03.03.2019 - 09.03.2019

4.6 வருடாந்த தொழில் அங்கத்துவக் கட்டணத்தை மீளச் செலுத்தல்

இவ்வாணைக்குழுவில் பணியாற்றும் கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர்களினால் தொழில்சார் நிறுவகங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய வருடாந்த அங்கத்துவக்கட்டணமானது இவ்வாணைக்குழுவால் மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

1. **திரு.ஜே.ஏ.டீ.ஜே.ஜெயலத் அவர்கள்** - பிரதி பணிப்பாளர் நாயகம்
   பிரித்தானியா கணனி சமூகம்
   இலங்கை கணனி சமூகம்

2. **திருமதி. சாகரிக்கா அமரசிங்க அவர்கள** - பிரதிப் பணிப்பாளர் (நிதி)
   இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகம்
   சான்றளிக்கப்பட்ட வியாபார கணக்காளர்

3. **திரு. ஆர். ஜே. சமரவீர அவர்கள்** - பிரதி பணிப்பாளர்
   (உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணை பிரிவு)
   இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகம
   சான்றளிக்கப்பட்ட வியாபார கணக்காளர

4. **திரு. எஸ். யூ. கே. ரூபசிங்க அவர்கள்** - பணிப்பாளர்
   (பாடநெறி பதிவு தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள்)
   இலங்கை பட்டய பொறியிலாளர் நிறுவகம்

5. **திரு. வஜிர பெரேரா அவர்கள்** - பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு)
   அரச இரசாயனவியல் சங்கம் - ஐக்கிய இராட்சியம்

6. **கலாநிதி எச்.எம்.ஏ.டீ.கே.ஹேரத் அவர்கள்** - உதவி பணிப்பாளர்
   இலங்கை கணனி சமூகம்

4.7 நிதி முன்னேற்றம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு அவசியமான நிதி ஏற்பாடுகள் திறைசேரியினூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டிற்காக திறைசேரியிடமிருந்து ஆணைக்குழுவிற்கு சொந்த செலவினங்களுக்காக கீழ்வருமாறு ஒதுக்கீடுகள் தயார் செய்யப்பட்டன.

- மீண்டுவரும் செலவினம் தொடர்பாக ரூபா 130 மில்லியன்கள்
- மூலதன செலவினம் தொடர்பாக ரூபா 9.9 மில்லியன்கள்
- மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 36 மில்லியன்களாகும்.

அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் திறைசேரியினால் ஆணைக்குழுவிற்கு அனைத்து ஒதுக்கீடுகளும் விடுவிக்கப்பட்டன.

2019 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானங்கள் தொடர்பான தகவல்கள் வருமாறு.

	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் (ரூபா)	உண்மையான வருமானம் (ரூபா)
நிறுவக பதிவு வருமானம்	1,910,000.00	2,873,500.00
நிறுவக தராதர அங்கீகாரம் மற்றும் கணிப்பீடு	2,000,000.00	2,594,000.00
சான்றிதழ் வெளியீடு	1,575,000.00	3,429,530.00
சான்றிதழ் தயாரிப்பு	1,000,000.00	4,715,500.00
தேசிய தொழிற்தகைமை சான்றுப்படுத்தல்	1,000,000.00	1,227,000.00
பரீட்சை கட்டணம்	24,000,000.00	27,802,180.00
பாடத்திட்ட விற்பனை	700,000.00	712,000.00
புத்தக விற்பனை	215,000.00	6,450.00
மாணவர் அறிக்கை புத்தக விற்பனை	2,500,000.00	4,348,050.00
கணிப்பீடு மற்றும் கணிப்பீட்டு வருமானம்	100,000.00	100,050.00
தர முகாமைத்துவ முறைமை	1,000,000.00	890,000.00
மொத்த வருமானம்	**36,000,000.00**	**48,698,260.00**

4.8 உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணைகள்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்குரிய கணக்காய்வு மற்றும் பணி ஆய்வு ஆகிய அலுவல்கள் இவ்வாணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. முன்னைய வருடங்களில் இதன் உள்ளக நிர்வாக முறைகள் போதுமானதாக காணப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் வருடங்களில் இவ்வாணைக்குழுவின் கணக்காய்வு அலுவல்கள் சுற்றறிக்கைகள், ஆணைக்குழுச் சட்டம் மற்றும் ஏனைய உரிய சட்ட திட்டங்கள் என்பவற்றுக்கு அமைவாக முன்நோக்கிக் கொண்டு செல்லப்படுகின்றது.

உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணைகள வேலைத்திட்டத்திற்கு அமைவாக 06 பிரதான கணக்காய்வு பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணை திட்டத்திற்கு அமைவாக திட்டமிடப்படாத கணக்காய்வு விசாரணைகளும் உள்ளக கணக்காய்வில் பணிப்பாளர் நாயகம் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பணிப்புரையின் பெயரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கணக்காய்வு அலுவல்கள் மற்றும் புதிய கொள்கைகளை பிரேரணை செய்தல் அல்லது கொள்கைகளை மாற்றம் செய்தல் என்பவை இவ்வாணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அவர்கள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மூலம் நிறைவேற்றப்படுவதுடன், இவ்வாணைக்குழு முறைமைகளிலுள்ள குறைபாடுகள் மற்றும் இழப்புக்களை மிகக் குறைந்த மட்டத்தில் பேணுவதற்கு தேவையான ஆலோசனைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டுசெல்வதற்கு அவசியமான அலுவல்கள் சம்பந்தப்பட்ட வருடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2019 ஆம் ஆண்டில் சில சந்தர்ப்பங்களில் ஆணைக்குழு கூட்டங்கள் இடம்பெறாமையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது இரண்டு சந்தர்ப்பங்களில் கூட்டங்களை நடாத்தியுள்ளதுடன் அச் சந்தரப்பங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவ தீர்வுகள் ஆணைக்குழுவிற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

1. உள்ளக கணக்காய்வு திட்டத்தினை செயற்படுத்துதல்
2. நிதி அறிக்கையினை மீளாய்வு செய்தல் மற்றும் அது தொடர்பான முகாமைத்துவ தீர்மானங்கள்
3. வருடாந்த செயற்பாட்டு திட்டம் தொடர்பான முகாமைத்துவ தீர்மானங்கள்
4. உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணைகளின் வினைத்திறன்
5. ஆணைக்குழுவின் செயற்திறன் தொடர்பாக மீளாய்வு மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள்
6. கணக்காய்வு அத்தியட்சகரின் அறிக்கை மீளாய்வு
7. ஏனைய இயக்க மற்றும் நிர்வாக செயற்பாடுகள் தொடர்பான பல்வேறுபட்ட முகாமைத்துவ தீர்மானங்கள்

இதற்கிணங்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் மேற்படி தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்குழுவின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வசதியாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரையில் காணப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்களை உள்ளடக்கியிருந்தது.

i. 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது கீழ்வரும் அங்கத்தவர்களை கொண்டிருந்தது.

- திரு.ஹேமால் கஸ்தூரி ஆராய்ச்சி அவர்கள்(ஆணைக்குழு உறுப்பினர்) - குழு தலைவர்
- கலாநிதி ராணி ஜயமஹ அவர்கள் (ஆணைக்குழு உறுப்பினர்) - குழு உறுப்பினர்
- திரு.புத்திக மடிகஹேவா அவர்கள் (ஆணைக்குழு உறுப்பினர்) - குழு உறுப்பினர்
- திரு.எஸ்.சீ.ஜகத் அவர்கள் (அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர்) - அவதானிப்பாளர்
- திருமதி எல்.ஏ.பீ.எஸ்.குணசேகர (அரச கணக்காய்வு பிரிவு) அவர்கள் - அவதானிப்பாளர்

ii. 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது கீழ்வரும் அங்கத்தவர்களை கொண்டிருந்தது.

- திரு.ஹேமால் கஸ்தூரி ஆராய்ச்சி அவர்கள்(ஆணைக்குழு உறுப்பினர்) - குழு தலைவர்
- கலாநிதி ராணி ஜயமஹ அவர்கள் (ஆணைக்குழு உறுப்பினர்) - குழு உறுப்பினர்
- திரு.புத்திக மடிகஹேவா அவர்கள் (ஆணைக்குழு உறுப்பினர்) - குழு உறுப்பினர்
- திருமதி ஆர்.எம்.டீ.எம்.குமாரி அவர்கள் (அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர்) - அவதானிப்பாளர்
- திருமதி எல்.ஏ.பீ.எஸ்.குணசேகர (அரச கணக்காய்வு பிரிவு) அவர்கள் - அவதானிப்பாளர

4.9 சட்டம் சார்ந்த அலுவல்கள்

சட்டத்தைச் திருத்தம் செய்வதன் முன்னேற்றம்

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டத்தில் 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவகங்கள் பதிவுகளை மேற்கொள்வதனை நெறிப்படுத்துவதற்கு அவசியமான வகையிலான சட்டரீதியான ஏற்பாடுகள் தொடர்பான சட்டமூலத்தினை சேர்த்துக்கொள்வதன் முக்கியத்துவமானது அடையாளம் காணப்பட்ட பின்னர் உரிய சட்டமூலத்தினை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சட்ட வரைவு திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட வரைவினை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மேலதிக நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மேலும், 2017 யூலை மாதம் புதிய ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்ட பின்னர் அவ் வரைவு மீண்டும் திருத்தங்களுடன் அமைச்சிடம் கையளிக்கப்பட்டதுடன் அவ் வரைவானது அமைச்சினால் சட்ட வரைவு திணைக்களத்திடம் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சட்ட வரைவினை மேலும் ஆராய்வதற்காக அதாவது இச் சட்டமூலத்தில் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க சட்டமூலமானது உள்ளடங்கியிருக்கும் காரணத்தினால் சட்டமூலத்தினை திருத்துவதில் நிறுவக நோக்கங்கள் மற்றும் அதிகாரங்கள் ஆகியவை தொடர்பாக காணப்படும் குழப்பமான நிலைமையினை தீர்ப்பதற்கு இரு நிறுவகத்தினையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குழு ஒன்றினை ஆணைக்குழு நியமித்துள்ளது. மேலும், முன்மொழிவு வரைவு மற்றும் அவை தொடர்பான தகவல்கள் ஆகியவை மேலதிக நடவடிக்கைகளின் பொருட்டு அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேலும், முழு சட்டமூலத்தினையும் ஒரே தடவையில் பரிசீலித்து திருத்தம் மேற்கொள்வதில் ஏற்படும் தாமதத்தினை விலக்குவதற்கு அத்தியவசிய விடயங்கள் தொடர்பான ஒழுங்குமுறையினை தயாரிப்பதற்கு அமைச்சின் மூலம் 2018.11.21 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஒழுங்குமுறை வரைவினை மேலதிக நடவடிக்கைகளின் பொருட்டு அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

2018.12.10 ஆம் திகதிய ஆணைக்குழுவின் அனுமதியிற்கு இணங்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை ஆகியவற்றின் பிரதிநிதிகளை கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அதில் பிரதிநிதிகளாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையினை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர். 2019 ஆம் ஆண்டில் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையில் வெற்றிடங்கள் நிலவியமையின் காரணமாக அதன் உறுப்பினர்கள் நியமிக்கப்படும் வரையில் இக் குழுவினை கூட்டுவதற்கு குறிப்பிடத்தக்க வசதியீனங்கள் காணப்பட்டன.

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் புதிய பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களை இக்குழுவில் பிரதிநிதித்துவம் செய்யும் பொருட்டு முன்மொழியப்பட்ட பெயர்கள் எம்மிடம் அனுப்பிவைத்துள்ளதாக தெரியப்படுத்தப்பட்டுள்ளமையினால் அவ்விடயத்துடன் இச் செயற்பாடு முன்னோக்கி கொண்டுசெல்லப்படும்.

பதிவு செய்யப்படாத மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவுசெய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள

ஆணைக்குழுவில் பதிவினை மேற்கொள்ளாமல் பயிற்சிகளை நடாத்திவரும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவகங்களை பதிவுசெய்வதற்கு ஆணைக்குழுவானது சட்டரீதியான அனுமதியின் கீழ் மேற்கொள்ளும் பொருட்டு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. அதற்கிணங்க, பத்திரிகை வாயிலாக விளம்பரங்களை பிரசுரிப்பதன் மூலமும் பதிவினை மேற்கொள்ளாத பயிற்சி நிறுவகங்களிற்கு தெளிவூட்டும் கடிதங்களை அனுப்பிவைப்பதன் மூலமும் அந்தந்த நிறுவகங்களிற்கு பதிவினை மேற்கொள்வதற்கான சூழ்நிலையினை ஏற்படுத்தியதுடன் இதுவரையில் 2019 ஆம் ஆண்டில் இவ்வாறான 85 கடிதங்கள் வரையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. 25 நிறுவகங்கள் இதுவரையில் இது தொடர்பாக சிறந்த பதில்களை காட்டியுள்ளன.

அவ்வாறே, அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவகங்களிடம் பதிவினை மேற்கொள்ளாத தொழிற்பயிற்சி நிறுவகங்கள் தொடர்பான விளம்பரங்கள் மற்றும் ஏனைய தகவல்களை வெளியிடும் போது அவற்றினை உறுதிப்படுத்தி முன்வைக்குமாறு கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியுதவியை முறையாக பயன்படுத்தாத நிறுவகங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் பிரிவு 04 (ஈ) மற்றும் 04 (ஊ) சரத்துக்களின் கீழ் தனியார் பிரிவு/ அரச சார்பற்ற துறை நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவிகளை சரியான முறையில் பயன்படுத்தாமை மற்றும் பாடநெறிகளை தராதர அங்கீகாரம் செய்யாமல் பாடநெறிகளை நடாத்திவரும் பயிற்சி நிறுவகங்களிடமிருந்து அந்நிதியுதவித் தொகையினை மீளப்பெறுவதற்கு உரிய சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இங்கு, கீழே தரப்பட்டுள்ள நிறுவகங்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நீதிபதி திணைக்களத்திடம் அவசிய ஆவண நடவடிக்கைகளின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சமாதிபிரஜா அபிவிருத்தி மன்றம் ஸ்ரீ சோபித தொழிற்பயிற்சி நிறுவகம் ஆகியவற்றினை இணக்கசபையிற்கு அழைத்த போது அவர்கள் சமூகமளிக்கவில்லை. அவ்வாறே, இதுவரையில் இணக்கமின்மை தொடர்பான சான்றிதழானது வழங்கப்பட்டுள்ளதுடன் வழக்கினை தொடர்வதற்கு நீதிபதி திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ சோபித தொழிற்பயிற்சி நிறுவகத்திடம் கோரிக்கைப்பத்திரமானது கையளிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் மேற்கொண்ட கோரிக்கையினை கருத்திற் கொண்டு வழக்கு தொடர்பாக இணக்கப்பாடு எட்டப்பட்டதன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள பொருட்களை மீண்டும் ஆணைக்குழுவிடம் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஷிக்மா நிறுவகத்திற்கு எதிராக தற்போது வழக்குத் தொடரும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதன்மூலம் வழங்கப்பட்டுள்ள நிதி உதவித் தொகை மற்றும் வழக்கு தொடர்பான செலவு என்பவற்றினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

விசாரணைகளை நடாத்துதல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு இவ் விடயம் தொடர்பாக ஒழுங்குபடுத்தும் நிறுவகமாக விளங்குவதால் பல்வேறு விடயங்கள் சார்ந்தாக பயிற்சி மத்திய நிலையங்களில் இடம்பெறும் பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு உரிய நிறுவகம், பயிலுநர் மற்றும் கணிப்பீட்டு அலுவலர்கள் ஆகியோர் முன்வருகின்றனர். இங்கு பக்கச்சார்பற்ற தலையீட்டாளர் என்ற வகையில் இப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அவசிய விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க, 2019 ஆம் ஆண்டில் உரிய 04 நிறுவகங்கள் தொடர்பாக விசாரணைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஆணைக்குழு கூட்டங்களை நடாத்துதல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் உதவி பணிப்பாளர் (சட்டம்) அவர்கள் ஆணைக்குழுவின் செயலாளராக கடமையாற்றுகின்றார். 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் யூலை மாதம் வரையில் பணிப்பாளர் சபையிற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படாததுடன் அதற்கான உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் 05 பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.



5.0 திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு

இவ்வாணைக்குழுவின் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் பிரதான தொழிற்பாடானது 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டத்தில் குறிப்பிடப்பட்ட முதலாவது குறிக்கோளானது இலங்கையின் பொருளாதார மற்றும் மனிதவள அபிவிருத்தித் தேவைகளுக்கேற்ப மூன்றாம் நிலைக்கல்வி, வாழ்க்கைத்தொழிற் கல்வி திட்டங்களை தயாரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் போன்ற இலக்குகளை நிறைவேற்றுவதற்காக உயிர்பான பங்களிப்புகளை வழங்குவதாகும். திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு பின்வரும் பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாகவுள்ளது.

- ஒவ்வொரு துறைகள் தொடர்பாகவும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல் மற்றும் செயற்படுத்துவதற்கான ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளல்
- இலங்கையில் மாகாண அடிப்படையில் தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை செயற்படுத்துதல்
- தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக் கொள்கைகளை தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல்
- தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறைசார் ஆராய்ச்சிக் கற்கைகள் தொடர்பான ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளல்
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணைத்திட்டத்தினை நாளதுவரையாக்கல் மற்றும் அதற்கமைய ஆணைக்குழுவின் வருடாந்த செயலாக்கத் திட்டத்தைத் தயாரித்தல்
- ஆணைக்குழு மாதாந்த, காலாண்டு மற்றும் ஆண்டுத் தேர்ச்சி அறிக்கைகளைத் தயாரித்தல்
- தனியார் மற்றும் அரச சார்பற்ற தொழிற்பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவிகளை விருதளிக்கும் செயற்பாட்டிற்கான அடிப்படையான பணிகளை மேற்கொள்ளல்.

மேற்கூறிய பணிகளை நிறைவேற்றுவதற்காக திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவில் நான்கு (04) பேர் கொண்ட பதவியணியொன்று காணப்படுகின்றது. இப்பிரிவில் பணிப்பாளர் ஒருவர் (01), உதவிப் பணிப்பாளர் ஒருவர் (01), அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் (01) மற்றும் கணனி பிரயோக உதவியாளர் (இவர் தற்போது ஆணைக்குழுவிலிருந்து விலகிச் சென்றுள்ளார்) ஒருவர் (01) கடமைபுரிகின்றனர்.

அதற்கிணங்க, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவால் 2019 ஆம் ஆண்டில் பின்வரும் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

5.1 அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவிகளை விருதளிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கை எடுத்தல்

அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தையும் மற்றும் தொழிலாளர் சந்தை சார்பகத்தன்மையையும் முன்னேற்றுவதற்கு அவசியமான பயிற்றுவிப்பு உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக ஆணைக்குழு இவ்வேலைத்திட்டத்தை செயற்படுத்தியுள்ளது. இதனூடாக தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் பாடநெறிகள் தேசிய தேர்ச்சி தரங்களுக்கமைய தராதர அங்கீகாரம் செய்யப்பட்டு அதன் மூலம் தேசிய தொழிற் திறன் தகுதிச் (ஏஞ) சான்றிதழ்களை விருதளிப்பதற்கான வாய்ப்பும் கிடைக்கின்றது.

2019 ஆம் ஆண்டு நிதியுதவி வேலைத்திட்டத்திற்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள பயிற்சி நிறுவகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்கமைய, பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 10 பயிற்சி நிறுவகங்கள் தொடர்பாக ஆரம்ப கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு நிதியுதவிகள் விருதளிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகளின் பொருட்டு ஆணைக்குழுவின் பதிவு செய்தல் மற்றும் தராதர அங்கீகாரமளித்தல் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

5.2 தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் (VET Plan) தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல்

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சி தேவைப்பாடுகளை கண்டறிவதற்காக தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. அதற்கிணங்க, 2019 ஆம் ஆண்டில் தன்னியக்க வாகன துறை தொடர்பான பயிற்சி திட்டத்தின் நாளாதுவரையாக்கல் செயற்பாடு நிறைவு செய்யப்பட்டது.

அதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடு 5.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேல்மாகாணத்திற்கான மாகாண அடிப்படையிலான பயிற்சி திட்டத்தினை 2013 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்திய போதிலும் அது அரைகுறையாக நிறைவுசெய்யப்பட்டதுடன் அதனை நிறைவு செய்வதற்கு 2019 ஆம் ஆண்டில் திட்டமானது தயாரிக்கப்பட்டது. இப் பயிற்சி திட்டமானது 2020 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்படும்.

a) தன்னியக்க வாகன தொழிற்துறைசார் பயிற்சி திட்டத்தினை நாளாதுவரையாக்கம் செய்து தயாரித்தல்

தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை நாளாதுவரையாக்கம் செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் தன்னியக்க தொழிற்துறைசார் திட்டத்தினை நாளாதுவரையாக்கல் 2018 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் மல்ரி ரெக் சொலூ'ன்ஸ் (Multitec Solutions) தனியார் நிறுவகம் இது தொடர்பாக ஆலோசனை பங்களிப்பினை வழங்கியது. இத் திட்டத்தினை தயாரிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் ரூபா 2,720,000.00 செலவிடப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டில் இவ் அறிக்கையினை வெற்றிகரமாக நிறைவுசெய்து செல்லுபடியாக்கம் செய்யும் (validation) வேலைத்திட்டமொன்று மற்றும் உரிய துறைசார் அலுவலர்களை அழைத்து அவர்களிற்கு முன்வைக்கும் (Launching) செயலமர்வொன்றும் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பாக 50 அலுவலர்கள் பங்குபற்றியிருந்ததுடன் இச் செயலமர்விற்கு DIMO நிறுவகத்தின் தலைவர் திரு.ரஞ்சித் பண்டிதகே அவர்கள் தலைமைதாங்கியிருந்தார். உரிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டமானது அச்சிடப்பட்டு பிரதிகள் உரிய நிறுவகங்களிற்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.



பயிற்சி திட்டம்
வெளிப்புற அட்டை



DIMO நிறுவகத்தின் தலைவர் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற செயலமர்வின் போது எடுக்கப்பட்ட படம் (2019.10.04)

5.3 தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறையில் ஆராய்ச்சிக் கற்கைகளை செயற்படுத்தல்

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் ஆராய்ச்சி சிற்றறை (Research Cell) ஆனது நடாத்தப்பட்டு வருகின்றது. 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சிற்றறை இது வரையில் தொழில்நுட்ப மற்றும் தொழிற் துறைக்கு முக்கியமான பல ஆராய்ச்சி முடிவுகளை வெளிக்கொண்டு வருவதற்காக நிதிசார் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றது. அத்துடன், நிறைவு செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கற்கைகள் ஆணைக்குழு இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு ஆராய்ச்சிச் சிற்றறையால் முன்வைக்கப்பட்ட பணிகள் அட்டவணை 5.4 இல் தரப்பட்டுள்ளன.

5.3.1 புதிய ஆராய்ச்சிக் கற்கைகள்

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில், திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் இயங்குகின்ற பயிற்சி வழங்கும் நிறுவகங்களிடமிருந்து ஆராய்ச்சி முன்மொழிவுகள் கோரப்பட்டன. ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் குறிப்பிடப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் போன்றவற்றினை செயற்படுத்துவதில் நிலவிய குறைபாடுகள் இனங்காணப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் ஆய்வுகளிற்கு மேலதிகமாக குறுகிய திட்டங்களை மேற்கொள்வதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குறுகிய திட்டங்களின் நிறைவில் தொழிற்கல்வி துறையிற்குரிய பிரச்சினைகளிற்கான தீர்வுகளை குறுகிய காலத்தில் எட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, பல்வேறு நிறுவகங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் முகமாக 27 ஆராய்ச்சி முன்மொழிவுகளும் மற்றும் 02 குறுகிய கால திட்டங்களும் ஆராய்ச்சி சிற்றறையிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றில் 2019 ஆம் ஆண்டில் 06 ஆய்வுகளையும் மற்றும் 02 குறுகிய கால திட்டங்களையும் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அம் முன்மொழிவுகள் ஆராய்ச்சி வழிநடத்தும் செயற்குழுவால் (Research Steering Committee) மதிப்பீடு செய்யப்பட்டதன் பிற்பாடு துறைக்கு உகந்த, காலத்திற்கேற்ற 06 ஆராய்ச்சி கற்கைகள் மற்றும் 02 குறுகிய திட்டங்கள் என்வற்றுக்கான அனுமதிகள் ஆணைக்குழுவிடம் இருந்து பெறப்பட்டுள்ளன. (இதில் ஒரு குறுகியகால திட்டமானது செயற்படுத்தப்படாது) இவ் ஆராய்ச்சி கற்கைகளில் தரத்தினை பேணும் பொருட்டு ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் அவசிய

ஆலோசனைகளை வழங்குதல் போன்றவை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஆராய்ச்சி சிற்றறை மற்றும் ஆராய்ச்சி குழு ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக ரூபா 2.0 மில்லியன் நிதி பங்களிப்பானது திறன்கள் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு ஆராய்ச்சிக் கற்கைகள் தொடர்பாக ஒதுக்கப்பட்ட செலவினங்கள் கீழே அட்டவணை 5.4 இல் காட்டப்பட்டுள்ளது. மேலும் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் முழுமையாக நிறைவுசெய்யப்பட்டு அவ் ஆய்வுகள் தொடர்பான சாரம்சங்களை உள்ளடக்கிய சிறு புத்தகமொன்று டீடீழழமடநவரூ தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 5.4 திறன்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் நிதி பங்களிப்பு மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி கற்கைகள் - 2019

இல	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சி நோக்கம்	ஆராய்ச்சி குழு	அனுமதிக்-கப்பட்ட நிதி (ரூபா)	2019 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா)
1.	இரத்மலானை பல்கலைக்கழகத்தின் ஏஞ டிப்ளோமா 05 மற்றும் 06 பயிலுநர்களின் செயற்றிறன் தொடர்பான அடிப்படை வேலைத்திட்டத்தின் செல்வாக்கு தொடர்பான கற்கை - 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையில் பயிலுநர்களின் செயற்றிறன் தொடர்பான விரிவான பகுப்பாய்வு	இரத்மலானை தொழில்நுட்ப கல்லூரியில் டிப்ளோமா பாடநெறிகள் தொடர்பாக பயிற்சி செயற்றிறன் பற்றிய அடிப்படை வேலைத்திட்டத்தின் செல்வாக்கினை அடையாளங்காணல் நோக்கங்களாவன, ● பயிற்றுநர்களின் செயற்றிறனில் செல்வாக்கு ஏற்படும் முறையில் பொருத்தமான அடிப்படை வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல் ● பயிற்சி செயற்றிறன் தொடர்பாக அடிப்படை வேலைத்திட்டத்தின் முக்கியத்துவத்தினை தீர்மானித்தல்	வாழ்க்கைத்-தொழில்சார் தொழில்நு-ட்பவியல் பல்கலைக்கழகம	60,000.00	30,000.00

இ	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சி நோக்கம்	ஆராய்ச்சி குழு	அனுமதிக்-கப்பட்ட நிதி (ரூபா)	2019 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா)
2.	2010 - 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சமுத்திர பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு பாடநெறிகளை பயின்ற பட்டதாரிகளின் தொழில் தன்மை	● சமுத்திர பல்கலைக்கழகத்தில் பட்டதாரிகளின் தொழில் நிலைமை மற்றும் தொழில் செயற்றிறன் என்பவற்றிற்கு இணங்க பட்டத்தினை நிறைவு செய்ததன் பின்னர் பட்டப்படிப்பு பாடநெறியின் செல்வாக்குகளை கண்டறிதல் ● தரவுகளிற்கு அமைவாக தொழில்கள் வகைப்படுத்தப்பட்டதன் பின்னர் பட்டம் மற்றும் தொழில் நிலைமை என்பவற்றிற்கு இடையிலான வேறுபாட்டினை கண்டறிதல் ● பட்டதாரி மாணவர்களின் அபிவிருத்தி தொடர்பாக செயற்பாட்டு திட்டமொன்றினை முன்வைத்தல்	சமுத்திர பல்கலைக்கழகம்	190,000.00	95,000.00

இ	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சி நோக்கம்	ஆராய்ச்சி குழு	அனுமதிக்-கப்பட்ட நிதி (ரூபா)	2019 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா)
3.	இலங்கையில் சமுத்திர பிரிவிற்குரிய தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பாக பெண்களின் ஈடுபாடு தொடர்பான கற்கை	• சமுத்திர பயிற்சி மற்றும் மீன்பிடி துறையில் பெண்களிற்கு தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்கள் தொடர்பாக நுழைதல் மற்றும் பங்குபற்றுவதல் ஆகியவை தொடர்பாக செல்வாக்கு செலுத்தும் காரணிகளை மீளாய்வு செய்தல் • பயிற்சி மற்றும் கல்வி தொடர்பாக பெண்களிற்காக காணப்படும் நுழைவினை மேம்படுத்தல் • கடந்த 10 வருடங்களில் சித்தியடைந்த ஆண் மற்றும் பெண் பிள்ளைகளின் தொழில் நிலைமைகளை கண்டறிதல் • மீன்பிடி மற்றும் கடல் பிரிவிற்குரிய தொழில் கல்விக்கு பெண்களின் கூடுதல் பங்குபற்றல் தொடர்பான தீர்வுகள் மற்றும் யோசனைகளை முன்வைத்தல்	சமுத்திர பல்கலைக்கழகம்	280,000.00	140,000.00


வ. எண்	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சி நோக்கம்	ஆராய்ச்சி குழு	அனுமதிக்-கப்பட்ட நிதி (ரூபா)	2019 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா)
4.	தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையில் தன்னியக்க நடமாடும் வியாபார பாடநெறியின் எதிர்பார்க்கப்படும் ஏஞ மட்ட வகைகளை (ஊடீவு ரூ நுடீவு) ஆய்வு செய்தல்	• தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையி-னால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பயிலுநர்களின் மட்டங்கள் மற்றும் வழங்கப்பட்ட தகைமை மட்டங்களிற்குரிய மோட்டார் வாகன இயந்திர வியாபாரம் என்பவற்றுக்கிடை யிலான வேறுபாட்டினை அடையாளங்காணல் • தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பாடநெறிகளில் ஊடீவு / நுடீவு வகைகளிடையிான ஒப்பீட்டினை விளங்கிக்கொள்ளல்	தேசிய பயிலுநர் மற்றும் கைத்தெ-ாழிற்பயிற்சி அதிகாரசபை	120,000.00	60,000.00
5.	மாணவர்கள் தொடர்பான கல்வி வடக்கு மாகாணத்தில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிகளின் நிமித்தம் காட்டும் விருப்பங்கள்	• வடக்கு மாகாணத்தில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பாக மாணவர்களின் மனப்பாங்குகளை ஆய்வு செய்தல்	தேசிய பயி-லுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிக-ாரசபை	63,000.00	31,500.00

இ	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சி நோக்கம்	ஆராய்ச்சி குழு	அனுமதிக்-கப்பட்ட நிதி (ரூபா)	2019 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா)
6.	வறுமையினை தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி செயற்பாடுகளை இலங்கையில் இளைஞர் யுவதிகளிடையில் குறைத்தல்	இலங்கையில் வறுமையினை குறைப்பதற்கு தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வியின் செயற்பாட்டினை கண்டறிதலி ● வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி வேலைத்திட்டங்கள் மூலம் வழங்கப்படும் தொழில்நுட்ப பட்டங்கள் மூலம் வழங்கப்படும் பட்டங்கள் மூலம் இலங்கையிலுள்ள இளைஞர் யுவதிகளின் வாழ்க்கையினைஅமை த்துக்கொள்ளக்கூடியத ாக உள்ளதா என்பதனை ஆய்வு செய்தல் ● இலங்கையில் வறுமை-யினை ஒழிப்பதற்கு தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வியின் செயற்பாடுகளை கண்டறிதல்	வாழ்க்கை-த்தொழில்சார் தொழில்நு-ட்பவியல் பல்கலைக்கழகம	195,000.00	97,500.00
கண்டறிதல்					
7	பதின்மூன்று வருட பாடசாலை கல்வியில் தொழிற்பயிற்சி துறையின் பொருட்டு தொழிற்பாதுகாப்பு தொடர்பான ஆசிரியர் பயிற்சி	● தொழிற்பயிற்சி துறையில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக பாடசாலைகளில் பதின்மூன்று வருட கல்வியில் ஆசிரியர்களிற்கு பயிற்சி அளித்தல் ● 12 - 13 வகுப்புகளில் ஆசிரிய பயிற்றுநர்களிற்கு பயிற்சி அளித்தல்	தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்	500.000,00	250,000.00
மொத்தம்				**1,408,000.00**	**704,000.00**


2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சி கற்கைகளுக்காக ரூபா 2 மில்லியனகள் திறன்கள் அபிவிருத்தி நிதியத்தின் ஒதுக்கீடாக கிடைக்கப்பெற்றுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டிற்காக அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டு நிதித்தொகையில் 50மூ இல் வேலைசெய்வதற்கு முடிந்துள்ளது. மிகுதித் தொகை ஆராய்ச்சிக் கற்கைகள் நிறைவடைந்தவுடன் 2020 ஆம் ஆண்டில் செலவுசெய்யப்படும்.

5.3.2 வருடாந்த செயற்பாட்டு திட்டம் - 2019 (AIP 2019)

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் மூலம் 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்பாட்டு திட்டமானது தயாரிக்கப்பட்டதுடன் அதிலுள்ள திட்டங்கள் தொடர்பாக அனைத்து பிரிவுகளுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டு அதற்கான ஆணைக்குழுவின் அனுமதியானது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2020 ஆம் ஆண்டில் மேற்கூறப்பட்ட முறையில் வருடாந்த செயற்பாட்டு திட்டமானது தயாரிக்கப்பட்டு ஆணைக்குழுவின் அனுமதியானது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.



வருடாந்த செயற்பாட்டு திட்டம் 2019



வருடாந்த செயற்பாட்டு திட்டம் 2020

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவினால் இணைந்த திட்டத்தினை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அதன் அவுட்லைன் ஆனது 2019 ஆம் ஆண்டில் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளது. இது 2020 - 2024 வரையிலான காலப்பகுதிக்குரியதாகும்.

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவானது பாராளுமன்ற சட்டமூலத்திற்கு அமைவாக அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்கு (Development Plan) தீர்மானித்துள்ளது. மேலும், இது தொடர்பாக 5 அணிகளை கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. மேலும், இச் செயற்பாட்டின் போது நிலையான அபிவிருத்தி இலக்குகள் (Sustainable Development Goals), தேசிய தொழிற்பயிற்சி கொள்கைகள் மற்றும் மத்திய வங்கி அறிக்கை முன்மொழிவுகள் என்பன இத் திட்டத்திற்கான ஆதாரங்களாக கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

6.0 பாடநெறி பதிவு செய்தல் தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டம் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்வதற்கான அபிவிருத்தி திட்டம் (1995 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 887/8 ஆம் இலக்க அரச வர்த்தமானி) என்பவற்றிற்கமைவாக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அனைத்து தொழிற்பயிற்சி நிறுவகங்கள் தொடர்பாகவும் கீழே தரப்பட்டுள்ளவாறு மூன்று படிமுறைகளில் தரத்தினை பாதுகாக்கும் செயற்பாடுகள் பின்பற்றப்படுகின்றன.

01. தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல்

02. பயிற்சி பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரம் அளித்தல்

03. தர முகாமைத்துவ முறைமைகளை ஸ்தாபித்தல்

04. நிறுவகங்களிற்கு நிதியுதவிகளை விருதளிப்பதற்கான சிபார்சுகளை அளித்தல்

பாடநெறிகளிற்கு தராதர அங்கீகாரம் அளிப்பதற்கு பயிற்சி உபகரணங்கள் தொடர்பாக பற்றாக்குறை நிலவும் பயிற்சி நிறுவகங்களிற்கு அவ் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நிதியுதவியினை அளித்தல் இவ் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட துறைகள் தொடர்பாக நிதியுதவிகளை அளிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

அதற்காக 20 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன் அதற்காக நிறுவகங்களை தேர்வுசெய்யும் நிபந்தனைகள் ஆராய்ந்து பார்க்கப்பட்டன. எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டில் எந்தவொரு நிறுவகத்திற்கும் நிதியுதவிகளை விருதளிப்பதற்கு சிபார்சு செய்யப்படவில்லை.

மேற்கூறப்பட்ட மூன்று பணிகளையும் நிறைவேற்றுவதற்கு அவசியமான வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக இப்பிரிவானது 12 பேர் கொண்ட பதவியணியொன்றினை கொண்டிருப்பதுடன் இப்பதவியணியில் பணிப்பாளர் ஒருவர், பிரதிப் பணிப்பாளர் இருவர், உதவிப் பணிப்பாளர்கள் இருவர், நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் இருவர், அபிவிருத்தி அலுவலரகள் இருவர், முகாமைத்துவ உதவியாளர்கள் இருவர் மற்றும் அலுவலக உதவிப் பணியாளரொருவர் உள்ளடங்கியுள்ளனர்.

6.1. தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல்

தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல் சட்டரீதியாக அவசியமானதாகும். நாட்டில் செயற்பட்டுவரும் அனைத்து பயிற்சி நிறுவகங்களும் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். (மேற்கூறப்பட்ட சட்டமூலத்திற்கு அமைவாக) நிறுவகத்தை பதிவு செய்கையில் அந்நிறுவகத்தின் உள்கட்டமைப்பு வசதிகளின் போதுமான தன்மை, பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள், பயிற்றுவிப்பாளர்களின் தகைமைகள், பயிற்சி வழங்கல் மற்றும் கணிப்பீடுகளை மேற்கொள்ளும் விதம், பாடத்திட்டத்தின் போதுமான தன்மை ஆகிய பிரமாணங்கள் தொடர்பாக நிறுவகங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு இரண்டு வருட காலப்பகுதிக்கு ஆணைக்குழுவினால் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டில் இவ்வாணைக்குழுவின் வருடாந்த செயலாக்கல் திட்டத்தின் பிரகாரம் புதிதாக பதிவினை மேற்கொள்வதற்காக 700 பயிற்சி நிறுவகங்களில் மதிப்பீட்டினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அவ்வாண்டில் 697 பயிற்சி நிறுவகங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

நிறுவக பதிவு தொடர்பாக மதிப்பீடு செய்தல் (புதிய மற்றும் நாளாதுவரையாக்கல்) தொர்பான விபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

	நிறுவகங்களின் எண்ணிக்கை		மொத்தம்
	புதிய பதிவுகள்	பதிவுகளை புதுப்பித்தல்	
(இலக்கு) கணிப்பீட்டு எண்ணிக்கை	300	400	700
கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை	315	369	684
கணிப்பீடு செய்யப்பட்ட எண்ணிக்கை	296	401	697

2019 ஆம் ஆண்டில் பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்வதற்கான அனுமதிகள் வழங்கப்பட்ட பயிற்சி நிறுவகங்கள் அவற்றின் நிறுவக உரிமை அடிப்படையில் கீழே தரப்பட்டுள்ளன.

நிறுவகங்கள் உரிமை அடிப்படையில்	பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை (புதிய)	பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை (நாளாதுவரையாக்கல்)
அரச நிறுவகம்	15	56
நியதிச்சட்ட மற்றும் கூட்டுத்தாபனம்	17	61
தனியார்	121	189
மொத்தம்	**153**	**306**

2019 ஆம் ஆண்டின் இறுதியில் 1290 தொழிற்பயிற்சி நிறுவகங்கள் தொடர்பாக பதிவுகளின் செல்லுபடியான தன்மை நிலவியதோடு அவை தொடர்பான தகவல்கள் நிறுவக உரிமை அடிப்படையில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

1. அரச நிறுவகங்கள் / நியதிச்சட்ட / கூட்டுத்தாபனங்கள் - 582
2. தனியார்/ அரச சார்பற்ற நிறுவகங்கள் - 708

பயிற்சி நிலையங்களின் பதிவுகளிற்கான கணிப்பீட்டு நடவடிக்கைகளின் நிமித்தம் தொழிற்பயிற்சி துறைசார் அனுபவம் மிக்க அலுவலர்களின் சேவையானது பெற்றுக்கொள்ளப்படுகின்றது. திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் பிரதேச செயலாளர் அலுவலகங்களில் இணைக்கப்பட்டுள்ள திறன்கள் அபிவிருத்தி அலுவலர்கள் 46 பேரிற்கு மேற்கூறப்பட்ட கணிப்பீடுகள் தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களின் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

பதிவுசெய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவகங்களிற்கு நிறுவக பதிவுகளை உறுதிப்படுத்தல் தொடர்பாக கடிதங்களை அளித்தல்

தொழிற்பயிற்சி மத்தியநிலையங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்ட சான்றிதழாளர்கள் வெளிநாடு செல்வதற்காக உரிய பயிற்சி நிறுவகத்தின் பதிவினை உறுதி செய்யும் கடிதமானது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் கையளிக்கப்படுவது இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறான 1280 இற்கும் அதிகமான கடிதங்கள் 2019 ஆம் ஆண்டில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

6.2 NVQ சான்றிதழ்களை வழங்கும் பொருட்டு பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரங்களை அளித்தல்

இலங்கையில் தேசிய தொழிற் திறன் தகுதிகள் (ஏஞ) சட்டகமானது 2004 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய தொழிற்தகைமைகளை (NVQ) விருதளிப்பதற்காக தேசிய தேர்ச்சி நியமங்கள் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு தேசிய தேர்ச்சி நியமங்களுக்கு இணங்க தேசிய பாடத்திட்டங்கள் தயாரிக்கப்படுவதுடன் அப் பாடத்திட்டங்களுக்கு இணங்க தேர்ச்சி அடிப்படையிலான முறையின் கீழ் பயிற்சி செயற்பாடுகள் இடம்பெறும் பாடநெறிகளிற்கான தராதர அங்கீகாரங்களை அளித்தல் ஆணைக்குழு மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பாடநெறி தராதர அங்கீகார கணிப்பீடுகள் தொடர்பான எண்ணிக்கைகள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. தராதர அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள பாடநெறிகள் ஊடாக பயிற்சியினை பெறும் பயிலுநர்களிற்கான இறுதி கணிப்பீடானது ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் பெறுபேறுகளிற்கு அமைவாக NVQ தகைமைகள் விருதளிக்கப்படுகின்றன.

	பாடநெறி தராதர அங்கீகார எண்ணிக்கை		மொத்தம்
	புதிய	நாளாதுவரையாக்கல்	
இலக்கிடப்பட்ட கணிப்பீட்டு எண்ணிக்கை	340	600	940
தராதர அங்கீகார கணிப்பீடு மேற்கொள்ளப்பட்ட எண்ணிக்கை	690	740	1430

2019 ஆம் ஆண்டில் இவ் ஆணைக்குழுவின் மூலம் தராரதர அங்கீகாரம் அளிக்கப்பட்ட மொத்த பாடநெறிகளின் எண்ணிக்கை 926 ஆகும் என்பதுடன் அவை கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறாகும்.

நிறுவக வகை உரிமை அடிப்படையில்	பாடநெறி தராதர அங்கீகார எண்ணிக்கை (புதிய)	பாடநெறி தராதர அங்கீகார எண்ணிக்கை (நாளாதுவரையாக்கல்)
அரச நிறுவகம்	155	124
நியதிச்சட்ட மற்றும் கூட்டுத்தாபனம்	270	306
தனியார்	138	65

6.3. தொழிற்பயிற்சி நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமையை நிறுவுதல் மற்றும் சான்றுப்படுத்துதல்

கீழே தரப்பட்டுள்ள தொழிற்பயிற்சி நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமையினை ஸ்தாபித்தல் தொடர்பாக வெளிவாரி தர கணிப்பீடுகள் இவ் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் 49 பயிற்சி நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள பயிற்சி நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமையினை ஸ்தாபிப்பதற்கான சான்றளிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. சுவிஸ் லங்கா பயிற்சி மத்திய நிலையம் - தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - எரமினியாய
2. இலங்கை விவசாய கல்லூரி - பரந்தன்
3. ரணவிரு சேவை தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - வத்தளை
4. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - புத்தளம்
5. யப்னா கொலீஜ் இன்ஸ்ரிரியூட் ஒப் அக்கிரிகல்ஜர் வொக்கேஷனல் ட்ரெயினிங் சென்டர்
6. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - மஹியங்கனை
7. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - நாவலப்பிட்டி
8. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - கஹட்டகஸ்திகிலிய
9. இளைஞர் இல்லம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - அனுராதபுரம்
10. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - அங்கம்மன கம்பொல
11. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - யாயாவத்தை
12. தொழில்நுட்பவியல் கல்லூரி - ஹசலக
13. இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவகம் - கிளிநொச்சி
14. பல்கலைக்கழக கல்லூரி - பட்டங்கல
15. உலப்பனை பயிற்சி மத்தியநிலையம் - தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
16. இளைஞர் ஊக்குவிப்பு மத்திய நிலையம் - தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - மாத்தறை
17. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - வெல்லவத்த
18. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - கிரிந்த
19. சமுத்திர பல்கலைக்கழகம் - மட்டக்குளிய
20. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - மாவத்தகம
21. டிமோ தனியார் கம்பனி - வெலவிரிய
22. மாவட்ட தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - மாரவில

23. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - வாகிரிய

24. யுனைட்டட் ட்ரக்ரர் தனியார் கம்பனி

25. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம - ரிகில்லகஸ்கட

26. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம - பொல்கொல்ல

27. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - கொதடுவ

28. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - இராஜகிரிய

29. ரெக்னிக் இன்டர்னஷனல் தனியார் கம்பனி

30. லிட்டில் பட்ஸ் மத்திய நிலையம்

31. மாவட்ட தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - சாரகம குருணாகல்

32. இலங்கை விவசாய கல்லூரி - அங்குணுகொலபலஸ்ஸ

33. இலங்கை விவசாய கல்லூரி - குருவிட்ட

34. யுலிசீடன் லங்கா இன்டர்னஷனல் தனியார் கம்பனி

35. தொழில்நுட்ப கல்லூரி - குளியாப்பிட்டி

36. டொன் பெஸ்கோ தொழிற்பயிற்சி நிலையம் - மட்டியகனே, நாரம்மல

37. தொழில்நுட்பவியல் கல்லூரி - குருணாகல்

38. கலம்பு ஸ்கூல் ஒப் கன்ஸ்ரக்சன் ரெக்னோலொஜி தனியார் கம்பனி

39. தொழில்நுட்ப கல்லூரி - மாத்தளை

40. மாவட்ட தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - நுவரேலியா

41. தொழில்நுட்ப கல்லூரி - தம்புள்ள

42. அக்வைனாஸ் கொலிஜ் ஒப் ஹயஸ்ரடீஸ் - கொழும்பு

43. இலங்கை விவசாய கல்லூரி - வாரியப்பொல

44. தொழில்நுட்ப கல்லூரி - நுவரேலியா

45. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - பாணந்துறை

46. பல்கலைக்கழக கல்லூரி - குளியாப்பிட்டி

47. மாவட்ட தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - பேராதனை

48. இலங்கை விவசாய கல்லூரி - வவுனியா

49. மாவட்ட தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - வெயாங்கொட

இதற்கும் மேலதிகமாக, பயிற்சி மத்தியநிலைய தர முகாமைத்துவ முறைமையினை ஸ்தாபித்தல் தொடர்பான தெரியப்படுத்தும் ஒருநாள் செயலமர்வுகள் 05 நடாத்தப்பட்டன. இதற்காக தொழிற்பயிற்சி நிறுவகத்தினை சேர்ந்த அலுவலர்கள் 200 பேர் வரையில் பங்குபற்றியிருந்தனர்.

2019 ஆம் ஆண்டில் 04 அலுவலர்கள் (Lead Auditors) இலங்கை கட்டளைகள் நிறுவகத்தில் கணக்காய்வுக்கான தகைமைகளை பெற்றுக்கொண்டுள்ளனர். தற்போது தொழில் கணக்காய்வாளர்களுக்கான தேவைகள் காணப்படுவதுடன் அதற்கிணங்க ஞஆளு பட்டியலில் 35 பேர் செயற்பாட்டில் உள்ளனர். அதற்காக மேலும் அலுவலர்களை பயிற்றுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் ஆணைக்குழு நிறுவக பதிவு மற்றும் பாடநெறி தராதர அங்கீகாரம் மற்றும் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளின் மூலம் உழைத்த நிதி தொடர்பான விபரம் பின்வருமாறு.

பயிற்சி மத்திய நிலைய பதிவுக்கட்டண வருமானம்	- ரூபா	2,873,500.00
தராதர அங்கீகார கட்டண வருமானம்	- ரூபா	2,594,000.00
மாணவர் அறிக்கை புத்தக விற்பனை (Student Record books)	- ரூபா	4,348,050.00
தர முகாமைத்துவ (QMS) சான்றிதழ் பத்திர விநியோகம்	- ரூபா	890,000.00
பயிற்சி நிறுவக பதிவினை உறுதி செய்யும் கடிதம்	- ரூபா	1,227,000.00
பதிவு காலங்கடந்தமைக்கான குற்றப்பணம்	- ரூபா	77,200.00
இந் நிதி திறைசேரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.	**- ரூபா**	**12,009,750.00**

இவ் வருமானத்தினை கருத்திற்கொண்டு வருடாந்த வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

7.0 தேசிய தேர்ச்சி நியமம், பாடத்திட்டம் மற்றும் தேசிய தொழிற்தகைமை பிரிவு

7.1 தேசிய தொழிற்தகைமை சட்டகத்தினை செயற்படுத்துவதற்காக தொழில்களுக்குரிய தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் என்பவற்றினை தயாரிப்பது பிரதான தேவைப்பாடாகும். அதற்கிணங்க, 2019 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேசிய தேர்ச்சி நியமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு அவை செல்லபடியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

7.1.1 துறைசார் திறன்கள் சபைகள் மூலம் முன்மொழியப்பட்ட பாடத்திட்டங்கள் உள்ளடங்கலாக தயாரிக்கப்பட்ட தேசிய தேர்ச்சி நியமங்கள்

● கைட்ரோலிக் கைவினைஞர்	4 ஆவது மட்டம்
● உற்பத்தி உதவியாளர்	4 ஆவது மட்டம்
● மீள்சுழற்சி கைத்தொழில் உதவியாளர்	4 ஆவது மட்டம்
● சுற்றுலா முச்சக்கரவண்டி சாரதி	4 ஆவது மட்டம்
● பூந் தோட்டம் மற்றும் தரை அபிவிருத்தி உதவியாளர்	4 ஆவது மட்டம்
● பல்லூடக திட்ட உதவியாளர்	4 ஆவது மட்டம்
● தன்னியக்க வாகன வளிச்சீராக்கி கைவினைஞர்	4 ஆவது மட்டம்
● மென்பொருள் அபிவிருத்தியாளர்	4 ஆவது மட்டம்
● பராமரிப்பாளர் (பிள்ளை)	2 / 3 / 4 ஆவது மட்டம்
● பராமரிப்பாளர் (முதியவர்)	4 ஆவது மட்டம்
● குருதி மாதிரி எடுக்கும் அலுவலர்	4 ஆவது மட்டம்
● ஆடை வடிவமைப்பாளர்	4 ஆவது மட்டம்
● தானியங்கல் மற்றும் ரோபோ தொழில்நுட்பம்	5 / 6 ஆவது மட்டம்
● விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்	4 ஆவது மட்டம்
● தன்னியக்க வாகன தொழில்நுட்ப சந்தை உதவியாளர்	4 ஆவது மட்டம்
● அச்சிடல் மற்றும் கிரபிக் கலை தொழில்நுட்பம்	5 ஆவது மட்டம்
● விளையாட்டு உருவல்	3 / 4 ஆவது மட்டம்
● மோட்டார் வாகன நிற தொழில்நுட்பவியலாளர்	4 ஆவது மட்டம்
● வினோத நீர் விளையாட்டு விஞ்ஞானம்	5 / 6 ஆவது மட்டம்
● பல்லூடக திட்ட உதவியாளர்	4 ஆவது மட்டம்
● ரிகர் (Rigger)	4 ஆவது மட்டம்
● இயந்திர வார்ப்பு கைவினைஞர்	4 ஆவது மட்டம்

7.1.2 அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய தேசிய தேர்ச்சித் தரங்கள் மாத்திரம் கீழே தரப்பட்டுள்ளன.

- அடையாள விஞ்ஞான தொழில்நுட்பம் 6 ஆவது மட்டம்

7.1.3 அபிவிருத்திசெய்யப்பட்ட புதிய பாடத்திட்டங்கள் மாத்திரம் கீழே தரப்பட்டுள்ளன

- முன்பள்ளி முகாமைத்துவம் 5 / 6 ஆவது மட்டம்
- மருந்தாளர் 4 ஆவது மட்டம்
- கால்நடை உற்பத்தி தொழில்நுட்பம் 5 / 6 ஆவது மட்டம்

7.2 கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் நாளதுவரையாக்கப்பட்டதன் பிற்பாடு மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அவற்றை செயற்படுத்துவதற்காக செல்லுபடியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

7.2.1 நாளதுவரையாக்கப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- இரும்பு கம்பி வளைப்பவர் 3 ஆவது மட்டம்
- வரவேற்பு அலுவலர் ,ோட்டல் துறை 4 ஆவது மட்டம்
- பற் சிகிச்சை தாதி உதவியாளர் 4 ஆவது மட்டம்
- குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி தொழில்நுட்பவியலாளர் 4 ஆவது மட்டம்
- தன்னியக்க வாகன வளிச்சீராக்கி/ தொழில்நுட்பவியலாளர் 3 / 4 ஆவது மட்டம்
- கணனி வெளியீட்டு கைவினைஞர் 3 ஆவது மட்டம்
- நிழல்பட கைவினைஞர் 4 ஆவது மட்டம்
- உற்பத்தி மேற்பார்வையாளர் (தையல்) 4 ஆவது மட்டம்
- கட்டுமான தள மேற்பார்வையாளர் 4 ஆவது மட்டம்
- ரயில் பதிப்பவர் 4 ஆவது மட்டம்
- உடல் தகுதி பயிற்சியாளர் 4 ஆவது மட்டம்
- கறுவா கள இயக்குநர் 3 / 4 ஆவது மட்டம்
- கறுவா தொழிற்சாலை இயக்குநர 3 / 4 ஆவது மட்டம்
- அதிவேக தையல் இயந்திர செயற்படுத்துநர 3 / 4 ஆவது மட்டம்
- பல்திறன் கைவினைஞர் 3 / 4 ஆவது மட்டம்
- தன்னியக்க வாகன தொழில்நுட்ப கைவினைஞர் 3 / 4 ஆவது மட்டம்

- முச்சக்கர வண்டி தொழில்நுட்ப கைவினைஞர் 4 ஆவது மட்டம்
- வீட்டு அலங்கார கைவினைஞர் 4 ஆவது மட்டம்
- குழாய் பொருத்துநர் 3 / 4 ஆவது மட்டம்
- செயலாளர் பரிச்சியம் 4 ஆவது மட்டம்
- கட்டுமான உபகரண தொழில்நுட்பவியலாளர் 4 ஆவது மட்டம்
- கட்டுமான கைவினைஞர் 4 ஆவது மட்டம்
- வர்ணம் தீட்டுநர் (கட்டிடம்) 3 ஆவது மட்டம்
- வெளிபலகை மோட்டார் தொழில்நுட்பவியலாளர் 4 ஆவது மட்டம்
- அறை உதவியாளர் ,ோட்டல் துறை 3 ஆவது மட்டம்

7.2.2 நாளதுவரையாக்கப்பட்ட தேர்ச்சி நியமங்கள் மாத்திரம் கீழே தரப்பட்டுள்ளன

- விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் 5 / 6 ஆவது மட்டம்

7.3 தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் தொடர்பான மொழிபெயர்ப்பு செயற்பாடு சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் கீழே வருமாறு

கீழே தரப்பட்டுள்ள தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

- குழாய் பொருத்துநர்
- பராமரிப்பு சேவை வழங்குநர் (முதியவர்)
- கட்டுமான கைவினைஞர்
- முச்சக்கர வண்டி கைவினைஞர்
- அலுமினிய சட்டகம் புனைதல் மற்றும் வீட்டு அலங்கார கைவினைஞர்
- புகைப்பட கைவினைஞர்
- அதிவேக நெடுஞ்சாலை இயந்திர தொழில்நுட்பவியலாளர்
- ரயில் பதிப்பவர்

கீழே தரப்பட்டுள்ள தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் கீழே வருமாறு

- குழாய் பொருத்துநர்
- கட்டுமான கைவினைஞர்
- அலுமினிய சட்டகம் புனைதல் மற்றும் வீட்டு அலங்கார கைவினைஞர்
- முச்சக்கர வண்டி கைவினைஞர்
- செயலாளர் பரிச்சியம்
- கறுவா கள இயக்கம்
- கறுவா தொழிற்சாலை இயக்கம்
- வெளி பலகை மோட்டார் தொழில்நுட்பம்
- பராமரிப்பு சேவை வழங்குநர் (பிள்ளை)
- தாதி உதவியாளர்
- ரைல் பதிப்பவர்
- பராமரிப்பு சேவை வழங்குநர் (வயோதிபர்)

தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள் மாத்திரம் கீழே வருமாறு

- விவசாய உதவியாளர்
- குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி தொழில்நுட்பவியலாளர்
- சிகை அலங்காரம்

தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட் பாடத்திட்டங்கள் மாத்திரம் கீழே வருமாறு

- கை இயந்திர கைவினைஞர்
- நீர் வாழ் உயரின வளர்ப்பு கைவினைஞர்

7.4 தேசிய தொழிற்தகைமை அல்லாத பாடநெறிகளின் தகைமைகளை தேசிய தொழிற் தகைமைகளுக்கு சமன் செய்தல்

தேசிய தொழிற்தகைமை அல்லாத பாடநெறிகளை பயின்ற விண்ணப்பதாரிகளுக்கு தேசிய தொழிற் தகைமைக்கு சமமான சான்றிதழ்களை அளிக்கும் பொருட்டு தொழில் மீளாய்வு பரீட்சைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் மூலம் சித்தியடைந்தவர்களுக்கு தேசிய தொழிற்தகைமைகளுக்கு சமன் செய்யும் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பாடநெறியின் பெயர்	தேசிய தொழிற்தகைமை மட்டம்	அளிக்கப்பட்ட சமன் செய்யும் சான்றிதழ்களின் எண்ணிக்கை
தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் பத்திரம் (சிவில் பொறியியல்)	மட்டம் 5	04
தொழிற்துறை தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ் பத்திரம் (சிவில் பொறியியல்)	மட்டம் 5	13

தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழாளர்களிற்கு சமமான தேசிய தொழிற்தகைமையினை விருதளிப்பதற்கு பத்திரிகை விளம்பரமொன்றின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு அறிவினை பரீட்சிக்கும் பொது பரீட்சையானது நடாத்தப்பட்டு அதில் சித்தியடைந்தவர்களிற்கு தொழில் மீளாய்வு பரீட்சையானது நடாத்தப்பட்டுள்ளதோடு அதன் மூலம் சித்தியெய்தியவர்களிற்கு தேசிய தொழிற்தகைமையினை சமன் செய்யும் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பாடநெறியின் பெயர்	தேசிய தொழிற்தகைமை மட்டம்	அளிக்கப்பட்ட சமன் செய்யும் சான்றிதழ்களின் எண்ணிக்கை
தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் பத்திரம்/ தொழிற்துறை தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ் பத்திரம் (சிவில் பொறியியல்)	மட்டம் 5	40

மேலும் கீழே தரப்பட்டுள்ள சான்றிதழ்கள் தொடர்பாக தேசிய தொழிற்தகைமைக்கு சமன் செய்யும் சான்றிதழ்களை விநியோகிக்கும் செயற்பாடானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிறுவகத்தின் பெயர்	பாடநெறியின் பெயர்	தேசிய தொழிற்தகைமை மட்டம்	அளிக்கப்பட்ட சமன் செய்யும் சான்றிதழ்களின் எண்ணிக்கை
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை / தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா	5 ஆவது மட்டம்	12
வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்	தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தேசிய டிப்ளோமா	5 ஆவது மட்டம்	01
	கணிய அளவை தேசிய டிப்ளோமா	6 ஆவது மட்டம்	04
பொறியியல் தொழில்நுட்ப நிறுவகம்	பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா	6 ஆவது மட்டம்	09

நிறுவகத்தின் பெயர்	பாடநெறியின் பெயர்	தேசிய தொழிற்தகைமை மட்டம்	அளிக்கப்பட்ட சமன் செய்யும் சான்றிதழ்களின் எண்ணிக்கை
இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம்	தகவல் தொழில்நுட்ப உயர் தேசிய டிப்ளோமா	6 ஆவது மட்டம்	08
	சிவில் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா	6 ஆவது மட்டம்	06
	விவசாய தொழில்நுட்ப உயர் தேசிய டிப்ளோமா	6 ஆவது மட்டம்	02
	மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா	6 ஆவது மட்டம்	01

7.5 தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடத்திட்டங்களின் பிரதிகளைத் தயாரித்தல்

அபிவிருத்தி செய்யப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் அவற்றிற்குரிய துணை ஆவணங்கள் உள்ளடங்கலாக மென்பாகப் பிரதிகள் இறுவட்டுகளை விற்பனை செய்தல் இப்பிரிவினால் செய்யப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் 1484 இறுவட்டுகளை விற்பனை செய்ததன் மூலம் ரூபா 742,000.00 வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

7.6 நிறுவகங்களுக்கு இடையில் தேசிய தொழிற்தகைமை செயற்படுத்தல் குழு கூட்டங்களை நடாத்துதல்

தேசிய தொழிற்தகைமை முறைமையினை செயற்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றிற்கு தீர்வுகளை கண்டறியும் முகமாக தீர்மானங்களை எடுத்தல் மற்றும் புதிய முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் தேசிய தொழிற்தகைமை முறைமையானது செயற்படுத்தப்பட்டுவரும் அரச மற்றும் தனியார் நிறுவகங்களின் சிரேஸ்ட அலுவலர்களை கொண்ட குழுவானது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் இவ்வாறான குழு கூட்டங்கள் 11 மேற்கொள்ளப்பட்டன.

7.7 தேசிய தேர்ச்சி நியமங்களை அபிவிருத்தி செய்தல் மேற்பார்வை குழு

தேசிய தொழில் நியமங்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர் சந்தை கேள்விகளை கருத்திற்கொண்டு அனுமதியினை வழங்குதல், தேசிய தொழிற் தேர்ச்சிகளின் தரங்களினை பேணுதல், தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் ஏனைய உரிய ஆவணங்களினை தயாரிக்கும் போது ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்தல் ஆகியவற்றிற்கு தேசிய தேர்ச்சி நியம அபிவிருத்தி மற்றும் மேற்பார்வை குழுவானது உருவாக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் இக் குழுவின் 11 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. உரிய தீர்மானங்கள் எடுத்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8.0 தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு

8.1 அறிமுகம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் தேசிய தொழிற்தகைமை கணிப்பீட்டு பிரிவு மற்றும் நிர்வாக பிரிவின் ஏஞ சான்றிதழ் பிரிவு ஆகியவற்றினை இணைத்து தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவானது ஸ்தாபிக்கப்பட்டது. அதற்காக துறைசார் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நிதி பங்களிப்பானது வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, இப் பிரிவில் பணிப்பாளர், பிரதி பணிப்பாளர், நான்கு உதவி பணிப்பாளர்கள், 01 நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர், 03 அபிவிருத்தி உத்தியோகத்தர், 04 முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் 02 கணனி பிரயோக உதவியாளர்கள் உள்ளனர். இம் மனிதவளத்தினை உபயோகித்து 2019 ஆம் ஆண்டில் கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8.2 தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) முறைமையினை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்

8.2.1 கணிப்பீட்டாளர்கள் தொடர்பான தரவு தளத்தினை பேணுதல்

8.2.1.1 தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்கள் தேவைப்பாட்டை எதிர்வுகூறுதல்

தயாரிக்கப்பட்டுள்ள தேசிய தேர்ச்சித் தரங்களின் எண்ணிக்கை மற்றும் 2017 ஆம் ஆண்டு நிறைவடையும் போது தரவுத் தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களின் எண்ணிக்கை, தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களின் பூகோள ரீதியான வதிவிடம் ஆகிய விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு தேவைப்படும் கணிப்பீட்டாளர்கிள்ன எண்ணிக்கை தொடர்பான எதிர்வுகூறல் அறிக்கையானது தயாரிக்கப்பட்டுள்ளது.

8.2.1.2 தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களாக பயிற்சி அளிப்பதற்கு தகுந்த நபர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகத்தேர்வினை நடாத்தல்

தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களாக நியமனம் வழங்குவதற்காக தேர்வுநாடிகள் தனிப்பட்ட ரீதியில் விண்ணப்பிக்க வேண்டும். இங்கு, விண்ணப்பதாரர்களை நேர்முகத்தேர்வுக்கு அழைப்பதற்கு நியமிக்கப்பட்ட காலப்பகுதியொன்று காணப்படாததுடன் கிடைக்கப்பெற்ற விண்ணப்ப படிவங்களின் அடிப்படையில் தகுதியானவர்களை தேர்ந்தெடுத்தல் நேர்முகத்தேர்வு சபை மூலம் மேற்கொள்ளப்படும்.

உரிய தொழிற்துறை தொடர்பான விசேட நிபுணத்துவமுடைய நபர்கள் இந் நேர்முகத்தேர்வு சபையிற்கு நியமிக்கப்படுவதுடன் 2019 ஆம் ஆண்டில் இவ்வாறான நேர்முகத்தேர்வுகளை 20 நாட்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் தேவை மற்றும் அவசியத்தின் பொருட்டு மீளாய்வாண்டில் இவ்வாறான நேர்முகத்தேர்வுகள் 19 நாட்கள் நடாத்தப்பட்டு கணிப்பீட்டாளர்கள் 614 பேர் பயிற்சி அளிக்கப்பட்டு தரவுத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

8.2.2 தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களிற்கு பயிற்சி அளித்தல் வேலைத்திட்டம் மற்றும் அதற்கான வசதிகளை வழங்குதல்

இதன் கீழ் உரிய வேலைத் திட்டங்கள் 10 நடாத்தப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டில் 957 கணிப்பீட்டாளர்களிற்கு நேர்முகத்தேர்வுகள் நடாத்தப்பட்டதுடன் அவற்றில் 614 பேர் கணிப்பீட்டாளர்களாக தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.

8.2.3 கணிப்பீட்டாளரகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல்

2019 ஆம் ஆண்டில் 15 கணிப்பீட்டாளர்களிற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

8.2.4. தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீட்டு செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்

இதன் கீழ் கீழ் வரும் 03 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தனியார் பிரிவு பயிற்சி நிறுவகங்களுக்கான கணிப்பீடுகளை நடாத்துவதற்குரிய அனுமதியினை வழங்குதல்
- அரச பிரிவு பயிற்சி நிறுவகங்களுக்கான கணிப்பீடுகளை நடாத்துவதற்குரிய அனுமதியினை வழங்குதல்
- முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல்.

8.2.4.1 தனியர் துறைசார் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சிசார் கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள தனியார் துறை பயிற்சி நிறுவகங்கள்/ நிலையங்களில் பாடநெறி தராதர அங்கீகாரம் மேற்கொள்ளப்பட்ட பாடநெறிகள் நடாத்தப்பட்டு அவை முடிவுறும் போது அப்பாடநெறிகளை பின்பற்றிய மாணவர்களை கணிப்பீட்டிற்கு உட்படுத்தி அதில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு தேசிய தொழிற்திறன் தகுதிகள் (NVQ) விருதளிக்கப்படுகின்றன.

இங்கு, உரிய நிபந்தனைகள் பரீட்சிக்கப்பட்டு அவை பூர்த்தியாகும் சந்தர்ப்பத்தில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் பேணப்பட்டுவரும் கணிப்பீட்டாளர் தரவுத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள கணிப்பீட்டாளர்கள் நியமனம் செய்யப்பட்டு அவர்களைக் கொண்டு கணிப்பீடானது மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு, பல்வேறுவகையான பயிற்சி நிலையங்கள்/ நிறுவகங்கள் மூலம் 2019 ஆம் ஆண்டில் கணிப்பீட்டினை மேற்கொள்வதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையானது 1073 ஆகும். இங்கு தனியார் துறை தொடர்பாக 1792 ம் அரச துறைசார் 1073 ம் காணப்படுகின்றன.

8.2.4.2 அரச துறைசார் பயிற்சி நிலையங்களில் / நிறுவகங்களில் தேர்ச்சிசார் கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கல்

அரச துறைக்குரிய பயிற்சி நிறுவகங்களில்/ நிலையங்களில் கணிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கும் செயற்பாட்டானது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தர நிர்ணயம் மற்றும் கணிப்பீட்டு அலகின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறான 1792 அனுமதி வழங்கல்கள் மீளாய்வு ஆண்டில் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் கீழ் செயற்பட்டுவருகின்ற நிறுவகங்களில் இருந்தும் மற்றும் இவ் அமைச்சிற்கு புறம்பான அரச துறை பயிற்சி நிலையங்கள்/ நிறுவகங்களில் இருந்தும் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சிற்குரிய நிறுவகங்கள் / பயிற்சி நிறுவகங்கள்

- தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்
- இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
- தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
- சமுத்திர பல்கலைக்கழகம்
- இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சிற்கு சொந்தமல்லாத அரச நிறுவகங்கள்.ஃ. பயிற்சி நிறுவகங்கள்

- தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
- இலங்கை இளைஞர் படையணி
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
- விவசாய திணைக்களம்
- சமூகசேவை திணைக்களம்
- இலங்கை விமானப்படை
- இலங்கை கடற்படை

எவ்வாறாயினும் அரச மற்றும் தனியார் துறை நிறுவகங்களில் தேசிய தொழிற்தகைமைகளை விருதளிப்பதற்குரிய கணிப்பீடுகளின் நிமித்தம் 2019 ஆம் ஆண்டில் உயர் கேள்விகள் நிலவியமையினை காணக்கூடியதாக இருந்ததுடன் இது இலக்கிடப்பட்ட எண்ணிக்கையிலும் பார்க்க அதிகமாகும். இவ்வாறான அனுமதியளிப்புகள் 2865 இவ் வருடத்தில் வழங்கப்பட்டன.

இவ்வாறு ஏற்படுவதற்கு பின்வருவன காரணங்களாக அமையலாம்,

- வெளிநாட்டு தொழில்வாய்ப்புகள் தொடர்பாக தேசிய தொழிற்தகைமைகளின் அங்கீகாரம்
- அரச நிரவாக அமைச்சினால் அமைச்சு/ திணைக்கள நிறுவகங்களின் பொருட்டு நபர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போதும் மற்றும் பதவியுயர்வுகளை அளிக்கும் போதும் தேசிய தொழிற்தகைமை முறைமையினை பயன்படுத்துமாறு உரிய நிறுவகங்களுக்கு அரச நிர்வாக அமைச்சினால் அறிவிக்கப்பட்டமை
- தேசிய தொழிற்தகைமை முறைமையானது சமூகத்தில் பிரபல்யமடைந்தமை
- தேசிய தொழிற்தகைமை மட்டம் 03 க.பொ.த (சா/த) இற்கும் மற்றும் தேசிய தொழிற்தகைமை மட்டம் 04 க.பொ.த (உ/த) இற்கும் சமன் செய்யப்பட்டமை

  தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சி பாடநெறிகள் தொடர்பாக தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்களை அளிப்பதற்குரிய மேலும் ஒரு முறைப்படி தகைமைகள் அளிக்கப்படுகின்றன. அவ்வாறு தொழிற்துறைகளில் தொழில்வாய்ப்புகளில் ஈடுபட்டு அனுபவம் உள்ள நபர்களுக்கு பாடநெறிகளை கற்பது கடினமானமாகும் அதனால் NVQ தகைமை தொடர்பாக அவர்களுக்கு கோரமுடியும். அவ்வாறு அனுபவங்களை கொண்ட நபர்களுக்கு தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு NVQ சான்றிதழ்கள் அளிக்கப்படுகின்றன. இம் முறையானது முன்னைய அனுபவங்களை கணிப்பீடு செய்யும் முறை (RPL) என அழைக்கப்படுகின்றது. இம் முறை மூலம் தேசிய தொழிற்தகைமைகளை விருதளிப்பதற்கு மூன்று அரச நிறுவகங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான மூன்று நிறுவகங்களாவன

- தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
- இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
- தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்

8.2.5 முன்னைய அனுபவத்தினை அங்கீகரித்தல் முறைமை தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல்

அவ்வப்போது மீளாய்வு கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் செயற்குழு கூட்டங்களிலும் மற்றும் பரீட்சை சபை கூட்டங்களிலும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை ஆகியவற்றுடன் முன்னைய அனுபவத்தினை அங்கீகரித்தல் முறைமை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் சவால்கள் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகரிகளுடனான கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இப் பணியகமானது "வீட்டுப் பணி உதவியாளர்" மற்றும் பராமரிப்பாளர் ஆகிய பதவிகளுக்காக வெளிநாடுகளிற்கு செல்வோருக்கான விசேட பயிற்சி பாடநெறிகள் நாடு பூராவும் அமைந்துள்ள அப் பணியகத்தின் பயிற்சி மத்திய நிலையங்க ஊடாக நடாத்திவருகின்றது. அப் பாடநெறிகள் முன்னைய அனுபவங்களினை அங்கீகரித்தல் முறையிற்கு இணங்க கணிப்பீடு செய்யப்பட்டு தேசிய தொழிற் திறன் தராதர (NVQ) சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

8.3 தேர்ச்சிசார் கணிப்பீடுகளில் சீர்த்தன்மையினை பேணுதல்

8.3.1 தேர்ச்சிசார் கணிப்பீடுகளில் சீர்த்தன்மையினை பேணுவதற்காகவும் மற்றும் கணிப்பீட்டாளர்களிற்கு அவசியமான அறிவினை நாளாதுவரையாக்குவதற்குமான செயலமர்வுகளை நடாத்துதல்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்குடன் ஐந்து (05) செயலமர்வுகளை மீளாய்வாண்டினுள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அவ்வாறான ஐந்து செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன. அத்துடன், இத்தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீட்டு முறைகள் 2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுடன் தொடர்பான கணிப்பீட்டாளர்களிற்கு பயிற்சி அளித்தல் செயற்பாடுகளும் அவ்வாண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டன. இச் செயலமர்வுகளில் கணிப்பீட்டு செயன்முறை மற்றும் புதிய துறைசார் அறிவினை நாளாதுவரையாக்குதல் என்பவை தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8.3.2 அரச மற்றும் தனியார் துறைசார் பயிற்சி நிலையங்களில் / நிறுவகங்களில் தேர்ச்சிசார் கணிப்பீட்டு நடவடிக்கைகளை கண்காணிப்பு செய்தல்

கடந்த ஆண்டில் அரச மற்றும் தனியார் துறைசார் பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்பட்ட தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீடுகள் 194 மேற்பார்வை செய்யப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் அரச துறைசார் தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீடுகள் 288 தொடர்பாக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன் அது நிறைவேற்றப்பட்டது. இம் மேற்பார்வையின் பெறுபேறுகளுக்கு அமைவாக ஏஞ சுற்றுநிருபம் 2017/ 01 இற்கு இணங்கவும் மற்றும் உயர் முகாமைத்துவத்தின் ஆலோசனைகளிற்கு அமைவாகவும் கணிப்பீட்டு செயற்பாட்டிற்கும் மற்றும் கோட்பாடுகளுக்கும் விரோதமான முறையில் செயற்பட்ட சந்தர்ப்பங்களில் கணிப்பீட்டாளர்களுக்கு அவசிய ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் ஏனைய ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க 838 கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8.4 முறைப்பாடுகளை விசாரித்தல்

கடந்த ஆண்டில் கணிப்பீடு தொடர்பாக கிடைக்கப்பெற்ற எழுத்து மூலமான 11 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் கணிப்பீடுகளை சரியான முறையில் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

8.5 அறிவினை பரிசோதிக்கும் பொது எழுத்து பரீட்சையினை நடாத்துதல்

8.5.1 தேசிய தொழிற்தகைமை மட்டம் 04 விருதளிப்பு தொடர்பாக பொது எழுத்துமூல பரீட்சையினை நடாத்துதல்

கீழே தரப்பட்டுள்ள தொழிற்துறைகளில் விண்ணப்பதாரிகளின் அறிவினை பரீட்சிக்கும் எழுத்துமூல பரீட்சைகள் கீழே தரப்பட்டுள்ள முறையில் நடாத்தப்பட்டன.

அட்டவணை 8.2.1 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொது பரீட்சைகளில் பங்குபற்றிய விண்ணப்பதாரிகள்

துறைகள்	பெப்ரவரி	ஏப்ரல்	யூலை	மொத்த எண்ணிக்கை
தன்னியக்க வாகன கைவினைஞர்	663	88	766	1517
வெதுப்புநர்	326	57	570	953
அழகுக்கலை	2413	383	2501	5297
வேலைத்தள மேற்பார்வையாளர்	500	40	247	787
சமையற்காரர்	487	68	848	1403
படவரைஞர்	742	129	256	1127
மின்னியலாளர்	967	417	588	1972
சிகை அலங்கரிப்பாளர்	2475	429	2153	5057
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கைவினைஞர்	5165	922	6127	12214
தாதி உதவியாளர்	7	6	106	119
முன்பள்ளி ஆசிரியர் (ஆரம்ப பிள்ளை அபிவிருத்தி)	359	219	3869	4447
கணிய அளவீட்டு உதவியாளர்	636	127	896	1659
குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி கைவினைஞர்	318	25	133	476
மொத்த எண்ணிக்கை	**15058**	**2910**	**19060**	**37028**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத் தளம்

2018 ஆம் ஆண்டில் இணையத்தள முறைமை மூலமாக வினா தொகுப்பு ஒன்றினை உருவாக்கும் பொருட்டு 13 பாடநெறிகள் தேர்வுசெய்யப்பட்டுள்ளதுடன் அவை தொடர்பாக உரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் உரிய வினாக்களை நிறைவுசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட பாடநெறிகள் தொடர்பாக தேசிய தொழிற்தகைமை மட்டம் 04 தொடர்பாக எழுத்துமூல பரீட்சைகள் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் 2019 ஆம் ஆண்டு ஜனவரி, ஏப்ரல் மற்றும் யூலை ஆகிய மாதங்களில் நடாத்தப்பட்டன. இவ் அனைத்து பரீட்சைகளினதும் பெறுபேறுகள் இவ் வருடத்திலேயே வெளியிடப்பட்டுள்ளன.

8.5.2 தேசிய தொழிற்தகைமை மட்டம் 5 மற்றும் 6 தொடர்பான எழுத்துமூல பரீட்சைகளை நடாத்துதல்

கடந்த வருடத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு ICT, Quantity Surveying, Construction Technology, Cosmetology, Agriculture Production Technology, Mecatronic Technology, Ref & AC Technology, Production Technology, Preschool Management, Diploma in Printing Technology, Drafting Technology kw;Wk; Automobile Technology ஆகிய பாடநெறிகள் தொடர்பாக தேசிய தொழிற்தகைமை மட்டம் 5 மற்றும் 6 இற்குரிய பொது எழுத்துமூல பரீட்சைகள் 2019 ஆம் ஆண்டில் நிறுவகங்களின் கோரிக்கைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டன.



8.6 கணிப்பீட்டாளர்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்

அமைச்சின் கீழ் செயற்பட்டுவரும் கீழே தரப்பட்டுள்ள நிறுவகங்களில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகள் தொடர்பாக பங்குபற்றிய கணிப்பீட்டாளர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் பயண கட்டணங்கள் ஆணைக்குழுவின் கணிப்பீட்டு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

1. தொழில்நுட்ப கல்வி, பயிற்சி திணைக்களம்
2. இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை (தேர்ச்சி அடிப்படையிலான பாடநெறிகள் தொடர்பாக)
3. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை (தேர்ச்சி அடிப்படையிலான மற்றும் நிறுவக பயிற்சி பாடநெறிகள் தொடர்பாக

இத் தலைப்பின் கீழ் கணிப்பீட்டாளர்களின் வவுச்சர் பத்திரங்கள் 1949 கணிப்பீட்டு அலகினால் சான்றுப்படுத்தப்பட்டு கணக்கு பிரிவிடம் முன்வைக்கப்பட்டது. அவ் வவுச்சர் பத்திரங்களின் மொத்த பெறுமதி 12,453,000 ஆகும்.

8.7 தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) சான்றிதழ்களை அச்சிட்டு வழங்குதல்

8.7.1 தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) சான்றிதழ்களை அச்சிட்டு வழங்குதல்

2019 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு 65,212 சான்றிதழ்களை அச்சிட்டு வழங்கியுள்ளது. அவற்றின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 8.7.1 தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) சான்றிதழாளர்கள் மற்றும் அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை - 2019 (நிறுவக ரீதியாக)

நிறுவகம்	சான்றிதழ்களின் எண்ணிக்கை				சான்றிதழாளர்களின் எண்ணிக்கை			
	திறன்கள் அடிப்படையிலான கணிப்பீட்டின் மூலமான சான்றிதழாளர்கள்	தொழிற்துறை தொழிற்பயிற்சி முறை	முன்னைய அனுபவத்தின் அடிப்படையின் மூலமான கணிப்பீட்டின் மூலமான சான்றிதழாளர்கள்	மொத்த சான்றிதழாளர்களின் எண்ணிக்கை	திறன்கள் அடிப்படையிலான கணிப்பீட்டின் மூலமான சான்றிதழாளர்கள்	தொழிற்துறை தொழிற்பயிற்சி முறை	முன்னைய அனுபவத்தின் அடிப்படையின் மூலமான கணிப்பீட்டின் மூலமான சான்றிதழாளர்கள்	மொத்த சான்றிதழாளர்களின் எண்ணிக்கை
தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	11117		82	11199	10096		67	10163
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை	2833	3342	5212	11387	2517	3258	4577	10352
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	1933			1933	1688			1688
தனியார் துறை	27792			27792	24379			24379
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை	23407		2289	25696	19014		1859	20873
மொத்தம்	**67082**	**3342**	**7583**	**78007**	**57694**	**3258**	**6503**	**67455**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத் தளம்

2019 ஆம் ஆண்டில் தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) மட்டம் 01 தொடக்கம் 06 வரையில் அச்சிட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை நிறுவக ரீதியாக கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன

அட்டவணை 8.7.2 2019 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்கள்

நிறுவகம்	முதலாவது	இரண்டாவது	மூன்றாவது	நான்காவது	ஐந்தாவது	ஆறாவது	மொத்த சான்றிதழ்களின் எண்ணிக்கை
தொழில்நுட்ப கல்வி, பயிற்சி திணைக்களம்		534	4028	5190	1342	105	11199
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை		1697	5556	4134			11387
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	42	125	508	1258			1933
தனியார் துறை	2120	1345	17340	6068	424	495	27792
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை	855	1531	12868	10075	361	6	25696
மொத்தம்	**3017**	**5232**	**40300**	**26725**	**2127**	**606**	**78007**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்

2019 ஆம் ஆண்டில் பயிற்சி நிறுவகங்களினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்களின் எண்ணிக்கை (ஆண் / பெண்) தொடர்பான விபரங்கள் அட்டவணை 8.7.3 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 8.7.3 2019 ஆம் ஆண்டில் விருதளிக்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்களின் எண்ணிக்கை (பாலின அடிப்படையில்)

நிறுவகம்	ஆண்	பெண்	மொத்தம்
தொழில்நுட்ப கல்வி, பயிற்சி திணைக்களம்	4299	6900	11199
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை	3464	7923	11387
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	1253	680	1933
தனியார் துறை	15408	12384	27792
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை	9059	16637	25696
மொத்தம்	**3483**	**44524**	**78007**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் 2019 ஆம் ஆண்டில் 1095 சான்றிதழ்கள் மீளவும் அச்சிடப்பட்டன. அவை தொடர்பான விபரங்கள் அட்டவணை 8.7.4 இல் தரப்படடுள்ளன.

அட்டவணை 8.7.4 மீண்டும் அச்சிடப்பட்ட சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் - 2019

சான்றிதழ் வகை	சான்றிதழ்களின் எண்ணிக்கை
அச்சிடல் பிழைகள் காரணமாக மீளவும் அச்சிடப்பட்ட சான்றிதழ்கள்	897
தொலைந்துபோன சான்றிதழ்கள் தொடர்பாக பிரதிகளை அச்சிடல்	102

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்

அட்டவணை 8.7.5 2019 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்களின் எண்ணிக்கைகள் EBT, CBT மற்றும் RPL என்பவற்றுக்கிடையிலான ஒப்பீடு கீழே தரப்பட்டுள்ளது

பயிற்சி முறை	சான்றிதழ்களின் எண்ணிக்கை
திறன்கள் அடிப்படையிலான கணிப்பீட்டின் மூலமான சான்றிதழாளர்கள்	67082
தொழிற்துறை தொழிற்பயிற்சி முறை	3342
முன்னைய அனுபவத்தின் அடிப்படையின் மூலமான கணிப்பீட்டின் மூலமான சான்றிதழாளர்கள்	7583

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்

2006 ஆம் ஆண்டு தொடக்கம் விநியோகிகப்பட்ட சான்றிதழ்கள் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.


அட்டவணை 8.7.6 2006 தொடக்கம் 2019 வரையில் வெளியீடு செய்யப்பட்ட மொத்த சான்றிதழ்களின் எண்ணிக்கை

ஆண்டு	சான்றிதழ்களின் எண்ணிக்கை
2006	259
2007	1,629
2008	8,915
2009	11,249
2010	13,256
2011	16,572
2012	18,111
2013	22,855

ஆண்டு	சான்றிதழ்களின் எண்ணிக்கை
2014	28,546
2015	44,148
2016	47,017
2017	65,212
2018	61,150
2019	78,007
மொத்தம்	**416,926**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்

வரைபு 8.7.1 2006 தொடக்கம் 2019 வரையில் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை



மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தேசிய தொழிற்தகைமை சட்டகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2019 ஆம் ஆண்டு நிறைவடையும் வரையில் 416,926 சான்றிதழ்களை விநியோகித்துள்ளது.

9.0 மக்கள் தொடர்பு பிரிவு (நிபுணர் மற்றும் தொழிற்துறை)

9.1 பின்னணி

2016 ஆம் ஆண்டில் தொழிற்துறைசார் உறவுகள் என்ற பெயரில் ஸ்தாபிக்கப்பட்ட இப் பிரிவானது 2018 ஆம் ஆண்டில் மிகவும் வலுவான முறையில் மக்களுடனான தொடர்பு செயற்பாட்டினை விரிவுபடுத்தும் நோக்கில் தற்போது மக்கள் தொடர்பு (நிபுணர் மற்றும் தொழிற்துறை) என்ற பெயரில் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

துறைசார் திறன்கள் சபைகள் இலங்கையில் முறையாக செயற்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் தொழில்வழிகாட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் போன்றவற்றுடன் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து தகவல்கள் மத்திய நிலையத்தினை ஸ்தாபித்து மக்கள் மற்றும் நிறுவகங்கள் என்பவற்றுடன் சுமூகமான தொடர்புகளை ஏற்படுத்தல் ஆகியவற்றினை இப் பிரிவானது பரந்தளவில் மேற்கொள்கின்றது.

9.2 மக்கள் தொடர்பு பிரிவின் (நிபுணர் மற்றும் தொழிற்துறை) பிரிவின் நோக்கங்கள்

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் கைத்தொழிற்துறைசார் நிறுவகங்களுக்கு ஏற்புடைய திறன்மிக்க மனிதவளத்தினை வழங்குதல், துறைசார் மக்களின் விழிப்புணர்வு மற்றும் தெரியப்படுத்துதல் மற்றும் தொழில் உலகத்தினுள் நுழைவதற்கு எதிர்பார்த்துள்ள இளைஞர் யுவதிகளிற்கு சரியான வழிகாட்டலினை மேற்கொள்வதற்கு தொழில் வழிகாட்டல் மக்கள் தொடர்புகள் பிரிவின் (நிபுணர் மற்றும் தொழிற்துறை) பிரதான நோக்கமாக கூறிக்கொள்ளமுடியும். இந் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்காக கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகள் மக்கள் தொடர்பு பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சி அளிப்பு தொடர்பாக பயன்படுத்தப்பட்டுவரும் தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பயிற்சி பாடத்திட்டங்கள் என்பவற்றினை அபிவிருத்தி செய்வதற்காக கைத்தொழிற்துறையின் பங்களிப்பினை வழங்குதல்.

- கைத்தொழிற்துறையில் ஏற்படும் தொழிநுட்ப மாற்றங்கள் மற்றும் புதிய போக்குகள் தொடர்பாக தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சி வழங்கல்களில் ஈடுபட்டுவரும் கல்விசார் அலுவலர்களை தெரியப்படுத்துதல் மற்றும் அவை தொடர்பான பயிற்சிகளை அவசியமாயின் வழங்குதல்.

- தற்போது வழங்கப்பட்டுவரும் தொழிற்பயிற்சிகள் மற்றும் கைத்தொழிற்துறைசார் கேள்விகள் ஆகியவற்றுக்கு இடையில் திறன்சார் இடைவெளிகள் காணப்படுகின்றனவா என்பதனை ஆராய்தல் மற்றும் அவ்வாறான நிலைமையொன்று காணப்படுமாயின் அவற்றினை விலக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சியினை பெற்றுவரும் பயிலுநர்களின் பொருட்டு கைத்தொழிற்துறைசார் பயிற்சி தொடர்பான பின்னுட்டல்கள் பெற்றுக்கொள்ளல் மற்றும் அதனை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சிகளை நிறைவு செய்த பயிலுநர்களிற்கு கைத்தொழிற்துறைசார் நிறுவகங்களில் காணப்படும் தொழில்வாய்ப்பு சந்தர்ப்பங்கள் தொடர்பாக தெரியப்படுத்துதலினை மேற்கொள்வதற்காக தொழில்வழிகாட்டல் மத்திய நிலையங்களை ஒருங்கிணைப்பதன் மூலமாக அவர்களிற்கு தொழில்வாய்ப்புகளை கண்டறிந்து கொள்வதற்கு உதவுதல்.

- முறைசார் பயிற்சிகளை பெற்றுக்கொள்ளாத கைத்தொழிற்துறை நிறுவகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு தகைமை சான்றிதழ்களை விருதளிப்பது தொடர்பாக துறைசார் திறன்கள் சபையின் ஒத்துழைப்புடன் அவர்களிற்கு தெரியப்படுத்துதல் மற்றும் தொழிற் பாதையில் மேல்நோக்கி செல்லல் தொடர்பாக அவர்களை தயார்படுத்தல்.

- கைத்தொழிற்துறை மற்றும் அவற்றில் காணப்படும் தொழில்வாய்ப்புகள் தொடர்பாக சமூகத்தில் சிறந்த நிலைமையினை ஏற்படுத்தல்

- ஆணைக்குழுவின் சேவைகளை மிகவும் வினைத்திறனாகவும் மற்றும் செயற்திறனாகவும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவ மாணவியரிடையில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பாக விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களிடத்தில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான கவர்ச்சியினை ஏற்படுத்தல்

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பாக ஒட்டுமொத்த சமூகத்திற்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- பொது தொழில் வழிகாட்டல் சேவையினை மேற்கொள்ளும் முகமாக அவசிய நடவடிக்கைகளை பின்பற்றுதல்.

- பல்வேறுபட்ட தொழிற்துறைகள் மற்றும் நிபுணர் குழுக்கள் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளை வலுப்படுத்தி தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையின் வளர்ச்சிக்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

9.3 செயற்பாடுகள்

மேலே கூறப்பட்டுள்ள நோக்கங்களை ஈடுசெய்யும் முகமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை மக்கள் தொடர்புகள் பிரிவானது 2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றியுள்ளது.

9.3.1 நான்கு துறைசார் திறன்கள் சபைகளை நடாத்துவதற்கு துறைசார் திறன்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் ஏற்பாடுகளை துறைசார் திறன்கள் சபைகளிற்கு முற்பணமாக வழங்கி அவற்றினை மிகவும் வினைத்திறனான முறையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல். சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு துறைசார் சுய குழு ஒன்றின் மூலம் உரிய துறைசார் வேலைகளை மேற்கொள்ளல்.

மக்கள் தொடர்பு பிரிவின் பங்களிப்பிற்கு இணங்க 04 துறைசார் திறன்கள் சபைகள் 2019 ஆம் ஆண்டில் செயற்பாட்டு நிலையில் காணப்படுவதுடன் செயற்திறன் குறைவாக காணப்பட்ட சுற்றுலா கைத்தொழிற்துறைசார் சபையானது 2019 ஆம் ஆண்டில் செயற்பாட்டு மட்டத்தில் காணப்படுகின்றது. அதற்கிணங்க, கீழே தரப்பட்டுள்ளவாறு 2019 ஆம் ஆண்டில் துறைசார் திறன்கள் சபைகள் 04 செயற்பாட்டு நிலையில் காணப்பட்டன.

- கட்டுமான தொழிற்துறைசார் திறன்கள் சபை
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை
- உற்பத்தி மற்றும் பொறியியல் சேவைகள் துறைசார் திறன்கள் சபை
- சுற்றுலா தொழிற்துறைசார் திறன்கள் சபை

இத் துறைசார் திறன்கள் சபைகளை நடாத்துவதற்கு அவசிய நிர்வாக செலவுகள் துறைசார் திறன்கள் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு வழங்கப்படுவதுடன் அது துறைசார் திறன்கள் சபைகளிற்கு வழங்கப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து துறைசார் திறன்கள் சபைகளினால் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அவை மீள அளிக்கப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு துறையானது சுயமான குழு மூலம் துறையிற்குரிய பாடத்திட்டங்களை அபிவிருத்தி செய்தலை மேற்கொண்டுள்ளது.

அவ்வாறே, இத் துறைசார் திறன்கள் சபைகள் 2019 ஆம் ஆண்டில் பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளதுடன் அச் செயற்பாடுகள் பின்வருமாறு.

i. கட்டுமான தொழிற்துறைசார் திறன்கள் சபை

தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி துறையின் கட்டுமான துறையில் ஈடுபட்டுள்ள பயிற்றுநர்களின் கோட்பாட்டு அறிவினை மேம்படுத்துவதற்கு நடாத்தப்பட்ட 05 வேலைத்திட்டங்கள் 12 கல்விச் சுற்றுலாக்கள் என்பவற்றில் 64 பயிற்றுநர்கள் பங்குபற்றியிருந்தனர்.

- கட்டுமான துறைசார் தொழிற்துறை நிறுவகங்களை சார்ந்த தொழில்நுட்ப மட்ட அலுவலர்கள் 29 பேரினை தேசிய தொழிற்தகைமைசார் கணிப்பீட்டாளர்களாக உருவாக்குதல்.
- தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள கணிப்பீட்டாளர்கள் 76 பேரிற்கு செயலமர்வு ஒன்றினை நடாத்தி அறிவினை மேம்படுத்துதல்.
- கோட்பாட்டு பயிற்சிகளை நிறைவுசெய்த 120 மாணவர்களை தொழிற்துறைசார் பயிற்சிகளில் ஈடுபடுத்தல்
- 13 வருட தொடர்ச்சியான கல்வியின் பொருட்டு இடம்பெற்ற 03 செயலமர்வுகளில் 03 பாடத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டன.
- இலங்கை பொறியியல் நிறுவகத்தின் (IESL) அழைப்பின் பெயரில் TECHNO 2019 தொழில்நுட்ப கண்காட்சியில் துறைசார் சபைகள் தொடர்பாக மக்களிற்கு தெரியப்படுத்துதல்.
- கட்டுமான துறைசார் திறன்கள் இடைவெளியினை அடையாளங்காண்பதற்கு திட்டமொன்றினை தயாரித்து ஆய்வு குழு ஒன்றிற்கான முறைமைகளை இனங்காணல்.
- தொழிற்துறை நிறுவகங்களை சார்ந்த ஊழியர்களிற்கு இலகு கற்கை நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை செயற்படுத்தல். அதற்காக இரண்டு தொழிற்துறை நிறுவகங்களை சார்ந்த் 16 ஊழியர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.
- துறைசார் திறன்கள் சபையிற்கு 04 பிரதான தொழிற்துறைசார் நிறுவகங்களின் பிரதிநிதித்துவங்களை பெற்றுக்கொள்ளல்.
- விசேட திறன் வழிகாட்டல் சேவையில் கட்டுமான துறைசார் புதிய போக்குகள்/ தொழில்வாய்ப்புகள் என்பவை தொடர்பாக தொழிற்துறை தொடர்பான பயிற்றுநர்கள்/ கணிப்பீட்டாளர்கள் மற்றும் மணவர்கள் ஆகியோரிற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் நாளாதுவரையாக்குதல் என்பவற்றின் பொருட்டு இரண்டு கைந்நூல்களை தயாரித்தல்
- தேர்ச்சி அடிப்படையிலான புதிய பயிற்சி பாடநெறிகளை தயாரிப்பதற்கு அவசியமான ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தல் (Pre Fabricator and Elector / Plasterer / Brick and Block Layer / Wood Craftsman Form Work) / Aluminum Fabricator / Erector)
- தற்போது பயன்பாட்டிலுள்ள பாடத்திட்டங்களிடையில் புதுப்பிக்கப்படவேண்டிய பாடநெறிகளை அடையாளங்கண்டு முன்வைத்தல் (Construction Equipment Operator / Survey Filed Assistant / Scaffolder / Construction Site Supervisor / Draughts personauto caddraughtsman) / Road Construction Site Supervisor / Wood Craftsman (Buildings) Road Construction Site Equipment Operator)
- தொழில்சார் ஒன்றியங்களை உருவாக்குவதற்கு பொருத்தமான தொழிற்துறைசார் நிறுவகங்கள் மூன்றினை அடையாளங்காணல்.

ii. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை

- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபையின் மூலம் 2019 ஆம் ஆண்டில் கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- இளைஞர் யுவதிகள் 700 பேரிற்கு தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக தெரியப்படுத்தும் வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- தொழில்வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகள் 200 பேரிற்கு தொழில்வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
- தொழிற்பயிற்சி துறைசார் 305 மாணவர்களின் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- புதிய தொழில்நுட்பத்தினை பயன்படுத்துதல் தொடர்பாக 160 ஆசிரியர்களிற்கு வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்.
- 970 மாணவர்களின் பொருட்டு தகவல் தொழில்நுட்ப துறையிற்கு வருகைதருவதற்கு முறைமைகளை அறிமுகம் செய்தல்.
- தொழிற்பயிற்சி துறைசார் மாணவர்கள் 1015 பேரிற்கு மென்திறன்களை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- இணையத்தளம் ஊடாகவும் மற்றும் சமூக ஊடகங்கள் மூலமாகவும் தொழிற்துறையினை மேம்படுத்துவதற்கு 102 பிரசுரிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- புதிய தொழிற்துறையாளர்கள் 26 பேரை வளவாளர்களாக பதிவுசெய்தல்.
- முப்படையினருக்கு பயிற்சிகளை அளிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 80 அலுவலர்களிற்கு தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பாக பயிற்சி அளித்தல்
- தேசிய தொழிற்தகைமை மட்டம் 04 தொடர்பாக தொழிற்துறைசார் வளவாளர்களை பெற்று பாடத்திட்டங்களின் அபிவிருத்தியினை நிறைவுசெய்தல்.
- தேசிய தொழிற்தகைமை முறைமையில் நிலவும் பிரச்சினைகளிற்கு தீர்வாக மாற்று முறைமை ஒன்றினை அறிமுகம் செய்தல்
- ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பாடத்திட்டத்தினை அபிவிருத்தி செய்தல்.
- இரண்டு பல்கலைக்கழகங்களுடன் உடன்படிக்கையுடன் கூடியதாக தகவல் தொழில்நுட்பத்தினை மேம்படுத்துவதற்கு இணைந்து செயற்படுதல்.

iii. உற்பத்தி மற்றும் பொறியியல் சேவைகள் துறைசார் திறன்கள் சபை

- உலோகம் சார் கைத்தொழில், மின், இலத்திரனியல், இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் ஆகிய துறைகள் தொடர்பான திறன் இடைவெளி பகுப்பாய்வு மதிப்பீட்டினை 2019 ஆம் ஆண்டில் நிறைவுசெய்தல்.
- வார்ப்பு தொழில்நுட்பம் மற்றும் கடதாசி மீள்சுழற்சி தொழில்நுட்பம் ஆகிய தேசிய தேர்ச்சி நியமங்களை அபிவிருத்தி செய்தலை ஆரம்பித்து வைத்தல்.
- தொழில்நுட்ப இலத்திரனியல் கைவினைஞர், கணனி எண் நிர்வாகம், வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம் இலத்திரனியல் மற்றும் மின் வழங்கல் தொழில்நுட்பவியலாளர் மற்றும் தன்னியக்க வாகன கைவினைஞர் போன்ற தேசிய தேர்ச்சி நியமங்களை செல்லுபடியாக்கம் செய்வதற்கான பங்களிப்புகளை வழங்குதல்
- முச்சக்கர வண்டி மற்றும் தன்னியக்க வாகன துறைசார் பயிற்றுநர்கள் 25 பேர், அலுமினிய சட்டகம் புனைதல் பயிற்றுநர்கள் 22 பேர், வெல்டிங் பயிற்றுநர்கள் 25 பேர், மர கைவினைஞர் பயிற்றுநர்கள் 20 பேர், மோட்டார் வைண்டர் பயிற்றுநர்கள் 15 பேர், நிகழ்ச்சித்திட்ட இயக்க நிர்வாக துறைசார் 23 பேர் ஆகியோருக்கு பயிற்சி வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.
- இலகுவான கற்றலின் பொருட்டு வர்த்தக வலைய மனிதவள முகாமையாளர்களிற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தல

iv. சுற்றுலா துறைசார் திறன்கள் சபை

- சுற்றுலா துறைசார் திறன்கள் சபையிற்கு முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதன் பின்னர் 04 மாதங்கள் வரையிலான காலப்பகுதிக்கு சேவையினை வழங்கியிருந்தார். அதன் பின்னர் இரண்டு முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டதோடு அவ்விருவரும் தற்போது துறைசார் திறன்கள் சபையிலிருந்து அகற்றப்பட்டுள்ளனர். இச் சபையின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் உரிய துறைசார் அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு வேலைத்திட்டங்களின் பொருட்டு பங்களிப்புகளை வழங்கியுள்ளனர்.

9.3.2. தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையினை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு துறைசார் திறன்கள் சபைகளிற்கு நிதியினை வழங்குதல் மற்றும் வழிகாட்டலினை மேற்கொள்ளல்.

2019 ஆம் ஆண்டில் துறைசார் திறன்கள் சபைகளின் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிடம் மேலதிக நிதியிற்கான கோரிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நிறுவகங்களின் செயற்பாடுகளிற்கு சமமான ஒதுக்கீடுகள் நிறுவகங்களினால் வழங்கப்பட்டிருந்தன.

9.3.3. துறைசார் திறன்கள் சபைகளின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவதற்காக தலைவர்கள் மற்றும் நிறுவக அலுவலர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்துதல் மற்றும் அவசிய நடவடிக்கை எடுத்தல்

துறைசார் திறன்கள் சபைகளின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல் மற்றும் எதிர்கால வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்தல் என்பவற்றின் பொருட்டு ஆணைக்குழுவானது துறைசார் திறன்கள் சபைகளின் தலைவர்களுடன் நான்கு கூட்டங்களை 2019 ஆம் ஆண்டில் நடாத்தியுள்ளது.

9.3.4 மாவட்ட தொழில் வழிகாட்டல் மத்திய நிலையத்தின் சேவைகளை வலுப்படுத்தல் மற்றும் கணிப்பீடு செய்தல்

மாவட்ட தொழில்வழிகாட்டல் மத்திய நிலையங்கள் மூலம் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மற்றும் அம் மத்திய நிலையங்களில் காணப்படும் உள்கட்டமைப்பு வசதிகள் என்பவை தொடர்பாக ஆராயும் பொருட்டு கணிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் அனுராதபுரம், கண்டி, வவுனியா, இரத்தினபுரி, காலி, ஆகிய மத்திய நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டன.

9.3.5 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் புதிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் செயலமர்வுகளை நடாத்துதல் மற்றும் நிலவுகின்ற தொழில்வாய்ப்புகள் பற்றி மக்கள், பாடசாலை மாணவர்கள், பாடசாலைகளை விட்டு விலகிய மாணவர்கள் ஆகியோரிற்கு தெரியப்படுத்தும் வேலைத்திட்டங்களை நடாத்துவதற்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

தொழிற்துறைக்கு பொருத்தமான முறையிலான பயிற்சி இலக்குகளின் நிமித்தம் மாணவர்களை ஈடுபடுத்துவதற்காக விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்கள் மகியங்கனை தொழிற்பயிற்சி நிறுவகம், அம்பாறை தொழிற்பயிற்சி நிறுவகம், அம்பாறை தொழில்நுட்பவியல் கல்லூரி, மொனராகலை தொழில்நுட்ப கல்லூரி மற்றும் வெல்லவாய மாவட்ட தொழிற்பயிற்சி நிறுவகம் ஆகியவற்றில் நடாத்தப்பட்டன.

அதற்காக 660 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். கெக்கிராவ ரஜரட்ட பிரதேசத்தில் பாடசாலைகளை விட்டுவிலகிய மாணவர்களிற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வேலைத்திட்டமொன்று இடம்பெற்றதுடன் அதில் 65 வரையிலான இளைஞர் யுவதிகள் பங்குபற்றியிருந்தனர். பிட்டிபன மகா வித்தியாலயத்தில் 50 வரையிலான மாணவர்களிற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் 2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டது. கங்குரன்கெத உடவத்தை பாடசாலையில் பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோரிற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதோடு அதில் 200 பேர் வரையில் பங்குபற்றியிருந்தனர்.

9.3.6 வாடிக்கையாளர்களிற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாக தகவல் வெளியீட்டினை தயாரித்தல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செயற்பாடுகளை ஏனைய நிறுவகங்கள் மற்றும் மக்களிடத்தில் கொண்டுசெல்லும் நோக்கில் அனைத்து பிரிவுகளினதும் ஒட்டுமொத்த தகவல்களை உள்ளடக்கிய வகையில் தகவல் வெளியீடுகள் 5000 அச்சிடப்பட்டுள்ளன

9.3.7 அமைச்சின் கீழ் செயற்பட்டுவரும் பயிற்சி நிறுவகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு என்பவை தொடர்பாக அலுவலர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரை தெளிவுபடுத்தும் முகமாக துண்டுப்பிரசுரங்களை தயாரித்தல்

தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி துறைசார்பில் நடாத்தப்பட்ட கண்காட்சிகள், தெளிவுபடுத்தல் வேலைத்திட்டங்கள் மற்றும் பயிற்சி மத்திய நிலையங்கள் ஆகியவற்றிற்கு விநியோகிப்பதற்காக சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் தகவல் வெளியீடுகள் 2019 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டன.

9.3.8 பொதுஜன ஊடகங்கள் வாயிலாக தொழிற்பயிற்சி துறைசார் பிரச்சாரங்கள் மற்றும் தகவல் வழங்கல் ஆகியவற்றினை மேற்கொள்ளல்

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் தகவல்களை வழங்குதல் மற்றும் தொழில் அபிவிருத்தி தொடர்பாக தெளிவுபடுத்துதல் ஆகிய நோக்கில் பொதுஜன ஊடகங்கள் வாயிலாக மக்களை தெளிவுபடுத்துதல் மக்கள் தொடர்பு பிரிவின் மூலம் 2019 ஆம் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன் பொருட்டு அலுவலர்கள் பல நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருந்தனர். தேசிய வானொலி மற்றும் தனியார் வானொலி நிகழ்ச்சிகள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்பவற்றினுடாக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

9.3.9 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் சந்தரப்பங்கள் தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட குழுக்களுக்கும் மற்றும் விசேட தேவையுடைய நபர்களிற்கும் தெரியப்படுத்துதல்.

மதவாச்சி பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் பலாகல பிரதேச செயலாளர் அலுவலகம் ஆகியவற்றில் துறைசார் அலுவலர்களை தெளிவுபடுத்துதல் 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் மேற்கொள்ளப்பட்டதோடு அவற்றில் 130 வரையிலான அலுவலர்கள் பங்குபற்றியிருந்தனர். மேலும், ரம்பாவ பிரதேச செயலாளர் அலுவலகத்தின் துறைசார் அலுவலர்கள் 65 பேரிற்கு ஆகஸ்ட் மாத்தில் தெளிவூட்டல் மேற்கொள்ளப்பட்டது.

9.3.10 தொழில்வழிகாட்டல் மற்றும் மென்திறன்கள் தொடர்பான விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

தொழில்நுட்பகல்வி மற்றும் பயிற்சி துறையில் ஈடுபட்டுள்ள மாணவ மாணவியரிற்கு தொழிற்துறை தொடர்பாக அவசியமான மென் திறன்களை அபிவிருத்தி செய்யும் 05 வேலைத்திட்டங்கள் மருதானை தொழில்நுட்பவியல் கல்லூரியிலும் மற்றும் இவ்விரண்டு வேலைத்திட்டங்கள் பத்தேகம, கண்டி, நாரே,ன்பிட்டி ஆகிய தொழிற்பயிற்சி அதிகாரசபையிலும் இடம்பெற்றன.

9.3.1 துறைசார் திறன்கள் சபைகள் காணப்படாத துறைகள் சார்பாக மாகாண மட்ட வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்

துறைசார் திறன்கள் சபைகள் காணப்படாத துறைகள் தொடர்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழிற்துறையாளர்கள், பயிற்சி நிறுவகங்கள், தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி சார்ந்த அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தக மற்றும் தொழிற்துறை சபை ஆகியவை இணைந்து தொழில்வாய்ப்புகளிற்கு ஏதுவான பயிற்சி தேவைகளை கண்டறிந்து அவற்றினை மேம்படுத்தல், தொழிற்துறைக்கு அவசிய மென் திறன்களை விருத்தி செய்தல் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட பிரச்சினைகளை தீர்த்து தொழிற்துறைசார் பயிற்சியினை மிகவும் வலுவான முறையில் மேற்கொள்ளும் முகமாக பயிற்சி நிறுவகங்கள் மற்றும் தொழிற்துறையாளர்கள் ஆகியவற்றிடையில் சிறந்த தொடர்பினை கட்டியெழுப்புதல் இதன் அடிப்படை கோட்பாடாகும். அதற்கிணங்க, 2019 ஆம் ஆண்டில் அம்பாறை, கம்ப,ா, கேகாலை, களுத்துறை, கண்டி ஆகிய மாவட்டங்களில் இக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

9.3.12 துறைசார் திறன்கள் சபைகள், வர்த்தக மற்றும் தொழிற்துறை சம்மேளனங்கள் மற்றும் மாவட்ட தொழில் வழிகாட்டல் நிலையங்கள் என்பன இணைந்து பிரச்சார வேலைகளில் ஈடுபடல்.

9.3.13 கொள்கை வகுத்தலின் பொருட்டு தேசிய தொழில் வழிகாட்டல் ஒழுங்கமைப்பு குழுவினை செயற்படுத்தல்

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி துறைசார் தொழில்வழிகாட்டல் சேவைகளை மிகவும் வலுவான முறையில் மேற்கொள்ளும் முகமாக தொழிற்கல்வி துறைசார் வழிகாட்டல் செயற்பாடுகளில் ஈடுபடும் நிறுவகங்கள் பலவற்றின் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தொழில் வழிகாட்டல் ஒழுங்கமைக்கும் குழுவின் மூன்று கூட்டங்கள் 2019 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.

9.3.14 பொது தொழில்வழிகாட்டல் மத்திய நிலைய அபிவிருத்தி மற்றும் மேம்பாடு ஆகியவற்றின் பொருட்டு மாவட்ட தொழில்வழிகாட்டல் மத்திய நிலையங்களிற்கு அவசிய நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல்

மாவட்ட தொழில்வழிகாட்டல மத்திய நிலையங்களின் அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல் தொடர்பாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்பாடுகள் 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன. அதன் நோக்கமாவது தொழில்வழிகாட்டல்களிற்கு உட்படுபவர்களின் மனங்களை கவருவதற்கான முறையில் நிலையத்தினை ஏற்படுத்துதலாகும். அதற்கிணங்க, 2019 ஆம் ஆண்டில் கண்டி, காலி, அனுராதபுரம் ஆகிய தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் உள்ள தொழில்வழிகாட்டல் மத்திய நிலையங்களிற்கும் மற்றும் இரண்டாவது அவத்தையாக கம்பஹா, குருணாகல், இரத்தினபுரி, காலி ஆகிய மத்திய நிலையங்களிற்கும் அளிக்கப்பட்டன. தற்போது பெற்றுக்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளிற்கு அமைவாக அவ்வாறான புதுப்பித்தல்கள் நிறைவுபெற்றுள்ளன.

9.3.15 தொழிற்துறைசார் பயிற்சிகளை முறையாக மேற்கொள்வதற்கு வசதியாக கலந்துரையாடல் மற்றும் மதிப்பீடு என்பவற்றுக்கு இணங்க சிபார்சுகளை முன்வைத்தல்.

தொழிற்துறைசார் பயிற்சியினை சரியான முறையில் மேற்கொள்ளல் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதோடு அதனால் அடையாளங்காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொண்டு தீர்வுகளை காண்பதற்கு அவசிய நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டன. அதற்கிணங்க திறன்சார் துசைகள் சபைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்துறைகளில் கூடுதல் மாணவர்களை உள்வாங்கல் 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்றது.

9.3.16 திறன்கள் அபிவிருத்தி அலுவலர்கள், தொழில்வழிகாட்டல் அலுவலர்கள் மற்றும் தொழில்வழிகாட்டல் துறைசார் அலுவலர்கள் ஆகியோரின் திறன்களை மேம்படுத்துவதற்கு செயலமர்வுகளை நடாத்துதல்.

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் சரியான தரவுகளை கொண்ட அலுவலர்களிடையில் தொழில் வழிகாட்டல் அலுவலர்களின் அறிவினை நாளாதுவரையாக்குதல் மற்றும் புதிய தகவல்களை வழங்குதல் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இங்கு இரண்டு வேலைத்திட்டங்கள் வஸ்கடுவ ரென்ஜரின் ஹோட்டலில் நடாத்தப்பட்டது. தமிழ் மொழியிலான வேலைத்திட்டமொன்று பொலன்னறுவையிலுள்ள சுது அரலிய ஹோட்டலில் இடம்பெற்றது. அவ்வாறே, தொழில் வழிகாட்டல் அலுவலர்களின் பொருட்டு கணனி பயிற்சி வேலைத்திட்டங்கள் இரண்டு நான்கு நாட்களிற்கு இலங்கை மன்ற நிறுவகத்தில் இடம்பெற்றது. இவ் அனைத்து வேலைத்திட்டங்களிலும் பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை 245 மாத்திரமேயாகும்.

9.3.17 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தொடர்பாக நிகழ்கால வேலைத்திட்டமொன்றினை தயாரிப்பதற்கு அவசிய செயற்பாட்டினை மேற்கொள்ளல்

மக்கள் தொடர்பு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விசேட வேலைத்திட்டங்கள்

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் அபிவிருத்தி தொடர்பாக உதவியளிக்கும் திட்டங்கள்/ வேலைத்திட்டங்களுடன் இணைந்து செயற்படுதல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் சேவைகள் பற்றி ஒட்டுமொத்த குடிமக்களிற்கும் தெரியப்படுத்துவதற்கு கண்காட்சிகள் உள்ளடங்கலாக வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் பங்குபற்றல்

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் அபிவிருத்தி தொடர்பாக வளவாளர்களை வழங்குதல்

- தேசிய மட்டத்தில் இடம்பெறும் வெளிக்களத்துடன் தொடர்பான வேலைத்திட்டங்களில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தல்

- துறைசார் திறன்கள் சபைகளின் நிறைவேற்று அலுவலர் கூட்டங்களில் பங்குபற்றல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தகவல் முறைமைகள் பிரிவினால் தயார்செய்யப்பட்ட "தொழிற்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டி (TVET Guide)" தொடர்பாக மக்கள் தொடர்புகள் பிரிவினால் கடிதங்கள் வெளியிடப்படுதல்

- Touch Your Future வேலைத்திட்டம் தொடர்பாக தொடர்ச்சியான பங்களிப்பினை வழங்குதல்

- மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தொடர்பாக மக்கள் தொர்பு பிரிவின் அலுவலர்கள் சம்பந்தப்படுவதுடன் பிரதேச தொழிற்துறை சபைகளுடன் இணைந்து செயற்படுவதற்காக அக் குழுக்களிற்கு யோசனைகளை முன்வைத்தல்.

- 2019 ஆம் ஆண்டில் ,ம்பாந்தோட்டையில் இடம்பெற்ற இளைஞர் கிராம நிகழ்ச்சித்திட்டம், அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற Enterprise Sri Lanka வேலைத்திட்டம் மற்றும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நாட்டிற்காக ஒன்று திரள்வோம் ஆகிய விசேட வேலைத்திட்டங்கள் மக்கள் தொடர்பு பிரிவின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு நடாத்தப்பட்டதுடன் கண்காட்சி கூடத்தினை பேணி மக்களிற்கு தகவல்களை வழங்குதல்

- பிரதமர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் விசேட தேவைகளை உடைய நபர்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்குதல் தொடர்பான கூட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் என்பவற்றுக்கு பங்களிப்பினை வழங்குதல் மற்றும் அவசிய வழிகாட்டல்களை வழங்குதல்.

- அமைச்சினால் வெளிநாட்டு புலமைப்பரிசில் தொடர்பாக திறன்கள் அபிவிருத்தி அலுவலர்களை தேர்வுசெய்வதற்கு நடாத்தப்பட்ட நேர்முகத்தேர்விற்கு பங்களிப்பினை வழங்குதல்.

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஏனைய பிரிவுகளின் கடமைகள் தொடர்பான அவசிய கோரிக்கைகளுக்கு அமைவாக பங்குபற்றல் மற்றும் செயற்படுதல்

- TVEC facebook இனை நாளாதுவரையாக்கி பேணுவதற்கு அவசிய நடவடிக்கைகளை எடுத்தல்.

10.0 தகவல் முறைமைகள் பிரிவு

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தகவல் முறைமைகள் பிரிவினால் பல்வேறுபட்ட தரவுகள் சேகரிக்கப்பட்டு தேவைக்கேற்ற வகையில் ஒழுங்குபடுத்தி அத்தகவல்களை உரியவர்களுக்கு வழங்கும் பணியானது செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இப் பணியை நிறைவேற்றுவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதுடன், அதனூடாக தகவல்களை மிக சுலபமாக பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்கும் முடியும். தகவல்களை ஒட்டு மொத்தமாக கணனியில் பதிவேற்றம் செய்வதன் மூலம் நிறுவகத்தின் அபிவிருத்தியை எட்டுவதற்கு இயலும். மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தகவல் முறைமைகள் பிரிவானது அத்தியாவசிய தகவல் சேவைகளை முறையாக வழங்குவதன் பொருட்டு, நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி அத்தகவல்களை நிறுவகத்தின் முன்னேற்றத்திற்காக வெற்றிகரமாக பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முறையில் வழங்கிவருவதுடன் நிறுவகத்தின் வளர்ச்சிக்காக எடுக்கப்படும் மூலோபாயங்கள் மற்றும் உரிய திட்டமிடல்கள் என்பனவற்றுக்காக நாளாந்தம் துரிதமாக அதிகரித்து வரும் தகவல்களை தரவுத் தளத்தின் ஊடாக வழங்கியும் வருகின்றது.

தகவல் முறைமைகள் பிரிவின் பிரதான குறிக்கோள்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செயற்பாடுகளை ஒழுங்காக்குவதற்கும் சுலபமாக்குவதற்கும் அவசியமான பல்வேறுபட்ட கணனி தகவல் முறைமைகளை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. தகவல் முறைமைகள் பிரிவானது பணிப்பாளர், பதில் தொழிற் சந்தை பகுப்பாய்வாளர் மற்றும் புள்ளிவிபரவியலாளர், பிரதி பணிப்பாளர் மற்றும் நூலகர், பதில் பிரதி பணிப்பாளர், 03 உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் கணினி வரைகலை வடிவமைப்பாளர் ஆகியோரைக் கொண்ட பதவியணியொன்றை 2019 ஆம் ஆண்டில் கொண்டிருந்தது.

தகவல் முறைமைகள் பிரிவின் பிரதான செயற்பாடுகள் மற்றும் வேலைத்திட்டங்கள் கீழே தரப்படுகின்றன

- தேவைக்கேற்ப தொழிற்சந்தை தகவல்களை பகுப்பாய்வு செய்து வழங்கல்
- எதிர்வரும் வருடத்திற்கான தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி வழிகாட்டியினை (TVET Guide) வெளியீடு செய்வதல் மற்றும் தேவையான தகவல் முறைமையொனறினை பேணுதல்
- UNEVOC பிராந்திய மத்திய நிலையத்தினை நடாத்திச் செல்லுதல் மற்றும் அதன் பணிகளையும் வேலைத்திட்டங்களையும் தொடர்ச்சியாக செயற்படுத்துதல்
- தொழிற் சந்தை தகவல் முறைமை மற்றும் இணையத் தள பக்கத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்
- தொழிற் சந்தை தகவல்களை வெளியீட்டினை தயாரித்தல் மற்றும் வெளியிடுதல்
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தொழிற்சந்தை தகவல் தொடர்பான பருவ வெளியீட்டினை (Newsletter) தயாரித்தல் மற்றும் பிரசுரித்தல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகளை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்காக கணனி முறைமையினை நிர்மாணித்தல் மற்றும் அதனை பேணுதல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள மற்றும் பதிவுசெய்யப்பட வேண்டியுள்ள நிறுவகங்களுக்கான வசதிகளை திட்டமிடுவதற்கு அவசியமான கணனி மென்பொருளினை தயாரித்தல் மற்றும் அவ் வேலையினை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு அவசியமான தகவல்களை அந் நிறுவகங்களுக்கு வழங்குதல்

- எமது நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சேவைகள் தொடர்பான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு தேவையான இணையத் தளத்தினை அபிவிருத்தி செய்தல், பேணுதல் மற்றும் இணையத்தளத்தினை நாளாதுவரையாக்குதல்.

- தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) சான்றிதழ்களை அச்சிடுவதற்கு தேவையான கணனி மென்பொருட்களை பேணுதல், தேவையான தரவுகளை பதிவேற்றம் செய்வதற்காக ஏனைய பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிறுவகங்களுக்கு ஆலோசனைகள் வழங்கல் மற்றும் அத்தரவுகளை முகாமைத்துவம் செய்தல்

- திறன்கள் துறை அபிவிருத்தி திட்ட (SSDP) வேலைத்திட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுவரும் முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) தொடர்பாக ஓர் இணைப்பாளராக செயற்பட்டு மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு அவசியமான தகவல்களை வழங்குதல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிலுள்ள ஒவ்வொரு பிரிவிற்கும் அவசியமான கணனி இயந்திரங்கள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட உபகரணங்களை கொள்வனவு செய்வது தொடர்பாக உள்ள தேவைகளை அடையாளம் காணல் மற்றும் அதற்கு தேவையான விபரக் குறிப்பினை வழங்குதல் மற்றும் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கல்

- இவ்வாணைக்குழுவில் கணனி வலையமைப்பினை ஒழுங்குசெய்தல், இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் வசதிகளை ஏற்படுத்தல், இவற்றுக்கு அவசியமான சேவர்களை (Servers) ஒழுங்கான முறையில் பராமரித்தல் மற்றும் அவற்றுக்கான வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்கள் ஆகியவற்றினை நாளாதுவரையாக்கல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு நூலக வசதிகள் மற்றும் அதனுடன் தொடர்பான தகவல் சேவைகளை திட்டமிடல் மற்றும் நூலகத்தினை நடாத்திச் செல்லுதல்

- தேவைக்கேற்ப உரிய தொழிற் சந்தைத் தரவுகளைப் பகுப்பாய்ந்து வழங்குதல் போன்ற அலுவல்களை இப்பிரிவு மேற்கொள்கின்றது. ஆணைக்குழுவின் அலுவல்களிற்கு அவசிய கணனி வரைபடங்களை வடிவமைத்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்பிரிவின் பிரதான தகவல் முறைமைகளானது தொழிற் சந்தை தகவல் முறைமை, தேசிய தொழிற்திறன் தகைமை அளிப்பு முறைமை மற்றும் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி முறைமை மற்றும் பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல், பாடநெறிகளிற்கு தராதர அங்கீகாரம் அளித்தல் தொடர்பான தகவல் முறைமை என்ற முறைமைகளை உள்ளடக்கியுள்ளது. 2019 ஆம் ஆண்டில் தகவல் முறைமைகள் பிரிவிற்கு பின்வரும் பிரதான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது.

10.1 தொழிற்சந்தை தகவல் முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு இலங்கையின் நடப்பு தொழிற் கேள்விகள்/ கிராக்கிகள் மற்றும் ஏனைய தொழிற் சந்தைத் தகவல்களை வழங்குதல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு தொழிற் சந்தை தகவல் முறைமையொன்று மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தரவு ஆய்வு மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களை தொழிற்சந்தைத் துறைசார் கொள்கை வகுப்பாளர்கள், தொழில் வழிகாட்டுநர்கள், தொழில்சார் வேலைவாய்ப்பு நிறுவகங்கள், பயிற்றுவிப்பாளர்கள், தொழில் தருநர்கள் மற்றும் தொழில் தேடுநர்கள் ஆகியோரிற்கு பயனுறும் விதமாக பிரசுர வடிவில் வெளியிடப்பட்டு வருகின்றது.

இத் தொழிற்சந்தை தகவல்களை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் வெளியீடு செய்யப்படும் தொழிற்சந்தை தகவல்களை பருவ வெளியீடுகள் (LMI Bulletin) மூலமும் மற்றும் ஆணைக்குழுவின் இணைய தள பக்கம் www.tvec.gov.lk மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

10.2 தொழிற்சந்தை தகவல் பருவெளியீட்டை தொகுத்தல் மற்றும் பிரசுரித்தல்

2019 ஆம் ஆண்டில் இரண்டு (02) தொழிற்சந்தை பருவவெளியீடுகளை பிரசுரிப்பதற்கு இப்பிரிவுக்கு இயலுமாயிருந்தது. இப்பிரசுரங்களின் மூலம் 2018 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிலும் மற்றும் 2018 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டிலும் இலங்கையின் தொழிற்சந்தையில் நிலவிய நிலைவரங்கள் மிகவும் துல்லியமாக பகுப்பாய்வு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

தொழிற்சந்தைத் தகவல் பருவ வெளியீடு பின்வரும் ஐந்து (05) பாகங்களை கொண்டுள்ளது.

1. தொழிலுக்காக நிலவுகின்ற கேள்விகள்
2. தொழில் வாய்ப்புகள்
3. தொழில் வாய்ப்பின்மைகள்
4. தொழிற் சந்தை வழங்கல்கள் அல்லது பல்வேறுபட்ட தொழில்கள் தொடர்பாக நிலவும் தொழிலாளர்களின் வழங்கல்கள்
5. தொழிற் சந்தை தொடர்பாக நிலவும் கேள்விகள் மற்றும் ஆராய்ச்சித் தகவல்கள்

2019 ஆம் ஆண்டில் தொழிற்சந்தை தகவல் பிரசுரத்தின் தரத்தை விருத்தி செய்வதற்கு பற்பல செயற்பாடுகளை இப்பிரிவு மேற்கொண்டது.

அதற்கமைய, தொழிற் சந்தைத் தகவல் பிரசுரத்தினை ஒரு புதிய பரிணாமத்துடன் தொழிற் சந்தை தொடர்பாக நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகள், தொழிற் படை தொடர்பான தகவல்கள் என்பவற்றை தொழிற் சந்தையின் போக்குகள் தொடர்பான விசேடமான ஆர்வமுடையோருக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் வண்ணம் இப்பிரசுரத்தில் வெளியீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


தொழிற்சந்தை தகவல் பிரசுரத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ரீதியில் தொழில்களுக்கான கேள்விகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ரீதியிலான புதினப் பத்திரிகை விளம்பரங்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறுபட்ட கைத்தொழிற் துறைசார் வேலைவாய்ப்புக்கள், தொழிலுக்கு அமர்த்துதல்கள், கல்வித் தகைமைகள், பால், அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் தொழில்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

